Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003

விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

(சி-259)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 04 (09.12.2002) திங்கட்கிழமை இதழ் : 69

## அதிரடிப்படை – வீரப்பன் மோதல்; இடையில் அகப்பட்டு நாகப்பா பலி!

### கர்நாடகத்தில் கலவரம் வெடிக்கலாம் என அச்சம்


நாகப்பா

(பெங்களூர்)

வீரப்பனால் கடத்திச்செல்லப்பட்ட கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் சடலம் நேற்று மாலை பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

106 நாட்களுக்கு முன்னர் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டிருந்த நாகப்பாவைத் தேடி கர்நாடகப் பொலிசாரும், அதிரடிப்படையினரும் தேடுதல் வேட்டைகளை நடத்திவந்தனர்.

இதன்போது அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் சிக்கியே நாகப்பா மரணமானதாக வீரப்பன் அனுப்பிய ஒலிநாடாவில் தெரிவிக்கப்பட்டிருந்ததையடுத்து குறிப்பிட்ட காட்டுப் பகுக்குச்சென்ற பொலிஸார் நேற்று மாலை அவரது சடலத்தை மீட்டனர்.


வீரப்பன்

கொள்ளேகல் பகுதியில் உள்ள சஸ்டி காட்டுப்பகுதியில் நாகப்பாவின் சடலம் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டது. சடலத்தை அடையாளம் காட்டிய குடும்பத்தினர் நேற்று மாலை அதனை வீட்டுக்குக் கொண்டுசென்றனர். (10 ஆம் பக்கம் பார்க்க)


சோகமயமாக நாகப்பாவின் குடும்பத்தினர்

# தீர்வு எதுவானாலும் இந்தியா வரவேற்கும்!

## விண்ணாணம் விநாசியர்


முந்தி கதிர்காமர் செய்ததை இப்ப அனுரா பொறுப்பெடுத்தாச்சுப் போல கிடக்கு...

## இந்திய வெளியுறவுச் செயலர் கொழும்பில் நேற்று அறிவிப்பு



(கொழும்பு)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை இந்தியா வரவேற்கின்றது. ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை சட்டரீதியான பிரச்சினைகளை தாம் எதிர்நோக்குவதாக இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்த பின்னர் வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. பேச்சுவார்த்தையில் அரசாங்கமும் புலிகளும் நல்ல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் - ரணில் சந்திப்பு; ஏற்பாடுகள் நடப்பதாக தகவல்!

### சிங்களப் பத்திரிகை செய்தி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை விரைவில் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசும் புலிகளும் புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருந்தாலும் இருதரப்பும் முறையான புரிந்துணர்வுடன் இருக்கவில்லை. ஒஸ்லோவில் நடைபெற்று முடிந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் மற்றும் புலிகளுடனான கூட்டம் என்பன இருதரப்புப் புரிந்துணர்வை வளர்த்திருக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு சுதந்திரக் கட்சி தீவிர நடவடிக்கை

### ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடவும் தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கென தமக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி உபயோகிக்க வேண்டுமென வலியுறுத்தும் வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சகல கிளைகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இதுபற்றிக் கருத்து வெளியிடும்போது -

கட்சியின் கிளைகள், வற்புறுத்தல்கள் விடுத்தால் மாத்திரமே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைப்பார் என்று தெரிவித்திருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பதுளைக் கிளையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஜ.மு. எம்.பிக்கள் குழு ஜெயலலிதாவையும் சந்திக்கும்

### அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று சென்னைக்குச் செல்லவுள்ளது.

இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பான முழு விபரங்களையும் இந்தியாவுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். அத்துடன் இலங்கையில் சமாதான முயற்சிகளில் இந்தியா தவிர்க்க முடியாத ஒன்று. எனவே, இந்தியப் பங்கை வலியுறுத்துவதற்கு இந்த விஜயத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் குழு பயன்படுத்திக்கொள்ளும் என்று அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈ.பி.டி.பி., கடற்படையினரை வெளியேறக் கோரி

## 3,500 நெடுந்தீவு வாழ் மக்கள் ரணிலுக்கு கையெழுத்து மகஜர்!

(நெடுந்தீவு)

கடற்படையினரையும், ஈ.பி.டி.பி உறுப்பினர்களையும் நெடுந்தீவை விட்டு வெளியேறுமாறு கோரி, 3500 மக்கள் கையெழுத்திட்ட மகஜர் - பிரதமருக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும், சர்வதேச தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இக் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

கடந்த 24 நாட்களாக நெடுந்தீவு மக்கள் போராடி வருவதன் உச்ச நிலையாக, இக் கையெழுத்துப் போராட்டம் இருந்தது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடி பலமடைகிறது ஹக்கீமின் அணி!

(கொழும்பு நிருபர்)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவுகளின் பின்னர் - அமைச்சர் ரவூப் ஹக்கீம் தரப்புக்கு கட்சியின் உயர்பீடத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்துள்ளது.

அதாவுல்லா அணியில் இருந்த பறூாக் மஜீத், ஹக்கீம் அணிக்கு மாறியதையடுத்து உயர்பீடத்தில் 11 உறுப்பினர்களின் ஆதரவு அவருக்கு கிடைத்துள்ளது. அதாவுல்லா அணியின் பலம் 10 ஆகக் குறைவடைந்துள்ளது.

இதையடுத்து நேற்று நள்ளிரவு அமைச்சர் ஹக்கீம் தலைமையில் முஸ்லீம் காங்கிரஸ் உயர்பீடக் கூட்டம் ஆரம்பமானது. இன்று அதிகாலை வரை நீடித்த இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் நியமிக்கப்பட்டுள்ளார்.



உள்ளே...
பாலாவின் ஒஸ்லோ உரை.

# தன்னிடமுள்ள ஆயுத விபரங்களை ஈராக் அரசாங்கம் கையளித்தது!

## ஐ.நா. விமானங்கள் மூலம் பக்தாத்திலிருந்து எடுத்துவரப்பட்டன



ஆயுத விபரப் பெட்டகம் 'சீல்' செய்யப்படுகிறது

(பக்தாத்)

ஈராக் தன்வசம் வைத்துள்ள ஆயுதத் தளபாடங்களின் விபரப் பெட்டகத்தை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்திற்கும், வியன்னாவிலுள்ள சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் அலுவலகத்திற்கும் அனுப்பி வைத்தது.

பக்தாத்திலிருந்து, ஐ.நா. சபையின் விமானம் மூலம் சைப்பிரசுக்குக் கொண்டு செல்லப்பட்ட இந்த ஆவணங்கள் வேறு விமானங்களின் மூலமாக சம்பந்தப்பட்ட இடங்களுககு எடுத்துச்செல்லப் படவுள்ளன.

12,000 பக்கங்கள் கொண்ட இந்த ஆவணங்களை ஐ.நா அதிகாரிகள் பரிசீலனை செய்யவுள்ளனர்.

இந்த ஆவணங்களில் - குறிப்பிடத்தக்க அளவு பக்கங்கள் அரபு மொழியில் உள்ளதால் அவை மொழிபெயர்க்கப்படவும் உள்ளன. அதன்பின்பே, ஐ.நா அதிகாரிகளின் ஆய்வு பூரணமாகும்.

இந்த ஆவணங்கள் சி.டி தட்டுக்களில் பின்னர் பதிவு செய்யப்படவுள்ளன.

ஈராக்கிய விஞ்ஞானியான அமீன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்த ஆவணங்களைத் தயார் செய்தது.

இதேவேளை, ஐ.நாவின் ஆயுதக் கண்காணிப்பாளர்கள், ஈராக்கில் தமது பரிசோதனைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

இந்த அதிகாரிகள் தற்போது ஈராக்கிலுள்ள முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து அவர்களிடமும் பேசி வருகின்றனர்.

# இவ்வாண்டின் உலக அழகியாக துருக்கி நாட்டுப் பெண் தேர்வு!

(லண்டன்)

லண்டனில் நடைபெற்ற இவ்வாண்டுக்கான உலக அழகிப் போட்டியில் துருக்கி நாட்டின் அழகி - உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

துருக்கி அழகி அஸ்ரா அகின் உலக அழகியாகத் தேர்வானார். கொலம்பிய அழகி இரண்டாவது இடத்தையும், பேரு நாட்டு அழகி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

முன்னதாக - நைஜீரியாவில் நடைபெறவிருந்த இந்தப் போட்டி- அங்கு இது தொடர்பாக நடந்த கலவரங்களினால் 220 பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து லண்டனுக்கு இடம் மாற்றப்பட்டது.

இந்த இடமாற்றம் நடந்த 10 நாட்களுக்குள், லண்டனில் பெரும் கோலாகலமாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

லண்டனின் வடபகுதியிலுள்ள அலெக்ஸாண்டிறா மாளிகையில் நடந்த இப்போட்டி 142 நாடுகளில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.



இவர்தான் உலக அழகி

உலகம் பூராவும் இருந்து ஒரு மில்லியன் மக்கள் இந்த நிகழ்வைப் பார்த்தனர். ஆனால் - பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேவைகளுடன், நிகழ்ச்சி அமைப்பாளர்கள் - உடன்பாடொன்றுக்கு வரமுடியாத நிலையில், இப்போட்டி பிரிட்டனில் மட்டும் ஒளிபரப்பாகவில்லை.



நைஜீரியாவில் நடந்த குழப்பம் அழகிப் போட்டியைப் பாதிக்கவில்லை



இங்கிலாந்து, பின்லாந்து அழகிகள்



உலக அழகி நீச்சல் உடையில்



ரஷ்ய, உக்ரெய்னிய அழகிகள்



சென்ற ஆண்டின் உலக அழகி, புதிய அழகியை வாழ்த்துகின்றார்

# கண்ணிவெடியில் சிக்கிய பஸ் நேபாளத்தில் ஐவர் பலி!

(காத்மண்டு)

நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சின்டுலி மாவட்டத்தில் பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் 30 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காத்மண்டுவுக்குத் தென்கிழக்கே 100 கி.மீ. தொலைவில் நடைபெற்ற



இத்தாக்குதலை மாவோ போராளிகளே நடத்தியதாக நேபாளப் பொலிசார் தெரிவித்தனர்.

இராணுவத்தினர், பொலிசார் மற்றும் பொதுமக்களை ஏற்றிச்சென்ற பஸ் வண்டியே தாக்குதலுக்குள்ளானது. கொல்லப்பட்டவர்களில் இருவர் படைவீரர்களாவர். காயமுற்றவர்கள் இராணுவக் ஹெலிகொப்டர்கள் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளனர். மேலதிகத் துருப்புக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தாக்குதல் நடைபெற்ற சின்டுலி மாவட்டத்தில் மாவோ போராளிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. கடந்த செப்ரெம்பர் 7ம் திகதி இம்மாவட்டத்தில் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 48 பொலிசாரும் மறுநாள் நடத்தப்பட்ட தாக்குதலில் 58 பேரும கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

## இன்றைய நாள் இனிய நாள்

**09-12-2002 - திங்கட்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 23ஆம் திகதி**

| | |
|---|---|
| *திதி* :- | பூர்வபட்ச பஞ்சமி - 9.50வரை அதன் மேல் ஷஷ்டி (விநாயக ஷஷ்டி விரதம்) |
| *நட்சத்திரம்* :- | திருவோணம் - மு.பகல் - 10.47 வரை அதன் மேல் அவிட்டம். |
| *ராகுகாலம்* :- | 7.48 - 9.18 |
| *சுபநேரம்* :- | 12.18 - 1.48 |

**மேடம்** :- தேகசுகம் நன்று, தெய்வவழிபாடு, சமய நூல் பாராயணம், தொழில் சிறப்பு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**இடபம்** :- பிதா மனநிறைவு, தெய்வ வழிபாடு, சமய நூல் பாராயணம், சமூகசேவையில் மனநிறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தேகசுகக் குறைவு, தேவையற்ற பிரச்சினை, தேடிவருதல், புதிய காரியங்களில் ஈடுபடுவது தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, தெய்வ தரிசனம், நண்பர்கள், உறவினர் சங்கமம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, நோய் நீக்கம், தெய்வ வழிபாடு, புதிய கடன், எதிரி மௌனம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, தெய்வ வழிபாடு, சமயநூல் பாராயணம், பொதுச் சேவையில் நல்மதிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- மாதா சுகக்குறைவு, கொடுத்த பண வரவு தாமதம், உறவினரால் செலவு, மனச் சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனதில் உற்சாகம், எடுத்த காரியம் கைகூடல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- மனச் சஞ்சலம், வரவுக்கு மிஞ்சிய செலவு, குடும்பக் கலகம், அயலில் மௌனம் சாதிக்கவும்.

**மகரம்** :- மனமகிழ்ச்சி, விருந்தினர் வருகை, உபசாரம், தெய்வ வழிபாடு, பணவரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- எடுத்த காரியம் தடை, கர்வநிலை, மிதமிஞ்சிய உணவு, வாக்குவாதம், கவலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தெய்வ சேவை, புதிய தொழில் முயற்சி, செய்தொழிலால் லாபம், புதிய முதலீடு செய்தல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


**IEECD** 121/1, அரசடி வீதி, கந்தர்மடம்
**ENGLISH**
Year 2003
*Gr. 6 - O/L, & A/L*
*(Personal & Group Classes)*
*By.*
**Mr.K.RAMANATHASAN**
(சி-276)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
**நேருக்கு நேர்**
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-287)

**ராஜா** யாழ்ப்பாணம்.

நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

## எங்கள் அன்பு வாடிக்கையாளருக்கு!

கடந்த 44 வருடகாலமாக கல்விக்காக சேவையாற்றிவரும் நாங்கள் யாழ்நகரில் ஒரே கூரையின் கீழ் சகலவிதமான, பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை உபயோகிக்கும் புத்தகங்கள், தமிழ், ஆங்கில நூல்கள், வாழ்த்துமடல்கள், நாட்குறிப்பேடு, நாட்காட்டி, பாடசாலைக்கான கற்றல் – கற்பித்தல் உபகரணங்கள், பாடசாலை உபயோகப் பொருட்கள், புத்தக அலுமாரி (**Cupboard**), சங்கீத – வாத்திய இசைக்கருவிகள், மாணவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக உபயோகப் பொருட்கள், ஆரம்பப்பிரிவு மழலைகளுக்கான கல்வி உபயோகப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் இலவசமாகப் பாடசாலைக்கே விநியோகிக்கப்படும்.

**இன்றே விஜயம் செய்யுங்கள்.**

**ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டஸ்**
**212, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம்.**

*தலைமை அலுவலகம்:*
**A.C.D.I.L.,**
371, Dam Street,
Colombo - 12.
*T.P.No.: 434529, 336237, 543547.*
*Fax No.: 541099*

*கிளை:*
**புக் சென்ரர்,**
**இல. 05, சென். லூசியஸ் வீதி,**
**கொட்டாஞ்சேனை,**
**கொழும்பு - 13.**

**No. 81,**
**Armour Street,**
**Colombo - 13.**
(சி-280)

## அறிவித்தல்

## மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| 12.12.2002 | வியாழக்கிழமை | நண்பகல் | 12.00 மணி (ப.நே.) - | கொடியேற்றம் |
| 20.12.2002 | வெள்ளிக்கிழமை | நண்பகல் | 12.00 மணி (ப.நே.) - | தேர் |
| 21.12.2002 | சனிக்கிழமை | காலை | 10.00 மணி (ப.நே.) - | தீர்த்தம் |

*மற்றைய உற்சவங்கள் காலை 9 - 12 மணிவரை*
*மாலை 3 - 6 மணிவரை நடைபெறும்.*

சி.சிவகுரு (தர்மகர்த்தா)

(060)

# சுயாட்சித் தீர்வை வழங்கினால் தனிநாட்டுப் பிரகடனம் வரும்!

## திலக் கருணாரட்ண எச்சரிக்கிறார்

சமஷ்டி எனப்படுவது தனிப்பட்ட நாடுகளின் கூட்டமைப்பே தவிர, ஒரே நாடு சமஷ்டிக்குள் இருக்க



முடியாது எனத் தெரிவித்துள்ளார் சிஹல உறுமயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவருமான திலக் கருணாரட்ண.

ஒஸ்லோவில் சமஷ்டித் தீர்வுக்கு புலிகளும் அரசும் இணங்கியிருப்பது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த சமஷ்டி முறைக்கு ஆதரவளித்தால், புலிகள் அதைப் பிரிவினைக்குக் கொண்டு சென்று விடுவார்கள். புலிகளை நம்பமுடியாது. 1982இல் மாவட்டசபை, 1987இல் மாகாணசபை எனத் தீர்வுகள் வழங்கப்பட்டபோது ஏற்காத புலிகள் இப்போது சமஷ்டி தீர்வை ஏற்போம் எனக் கூறுகிறார்கள்.

தனியான பொலிஸ், நீதிமன்றங்கள், வங்கி அமைப்பைக் கொண்டுள்ள புலிகள் சமஷ்டியின் மூலம் தனிநாட்டைப் பிரகடனம் செய்வார்கள். அதற்குத் தயார்படுத்தும் முயற்சியே இது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரசைப் பலவீனப்படுத்துவதே பிளவினை ஏற்படுத்தியவர்களின் நோக்கம்

## மூதூரில் ஹக்கீம் தெரிவிப்பு

(மூதூர்)

ஆட்சியை நிர்ணயம் செய்யும் நிலையில் இருந்து முஸ்லிம் காங்கிரசைப் பலவீனப்படுத்துவதற்கே, கட்சியில் பிளவுகள் தோற்றுவிக்கப்பட்டதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆதரவாளர்களைச் சந்தித்து, தனது பலத்தைப பெருக்கிக் கொள்வதற்காக அமைசசர் மூதூர் பகுதக்குச் சென்றிருந்தார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு இணைந்த தீர்வு ஒன்றைக் காணும்போது தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். வட-கிழக்கு தமிழ் மக்களுக்கு நிரந்தமான அரசியல் தீர்வு கிடைத்து, தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதுதான் மறைந்த அஷ்ரப்பினது கனவாகும்.

தமிழர்கள் தனிநாடு என்ற நிலையில் இருந்து உள்ளக சுயாட்சிக்கு வந்த நிலையில், முஸ்லிம்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என அமைச்சர் ஹக்கீம்



மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீமுடன் கே.எம். தௌபிக், எம்.எஸ்.தௌபிக் ஆகிய எம்.பிக்களும் உடன் சென்றிருந்தனர்.

# துணை மருத்துவர் போராட்டம் 9 நாட்களில் 100 பேர் மரணம்!

இலங்கையில் துணை மருத்துவ ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால், கடந்த 9 நாட்களில் வைத்தியசாலைகளில் 100 பேர் மரணமடைந்துள்ளனர்.

நோயாளிகள் பலர் வைத்தியப் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தனியார் வைத்தியசாலைகளில் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள் என்றும், பல நோயாளிகள் நீண்ட வரிசையில் நின்று மருந்து எடுத்துக் கொண்டு செல்கிறார்கள் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

சில வசதியுள்ள நோயாளிகளே தனியார் வைத்தியசாலைகளில் 3,000 ரூபா, 4,000 ரூபா கொடுத்து 'ஸ்கான்' பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தம் பற்றி கலந்துரையாடுவதற்கு சுகாதார அமைச்சிடமிருந்து தமக்கு எந்த வித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று துணை மருத்துவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பணத்துக்காக பஸ் கடத்திய பாடசாலை மாணவர்கள்!

## பண்டாரவளையில் சம்பவம்

(பண்டாரவளை)

பண்டாரவளை பஸ் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றை ஐந்து மாணவர்கள் கடத்திச் சென்றுள்ளனர். கடந்த வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்றும் ஐந்து மாணவர்களே இக்கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். பஸ்ஸை எடுத்துச் சென்ற இவர்கள் வேறொரு இடத்தில் அதனைக் கைவிட்டுச் சென்றனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில், பணத்துக்காகவே இந்த பஸ்ஸை மாணவர்கள் கடத்தியதாகத் தெரியவந்தது. (01)

# எனது ஆட்சியைக் கலைக்க சந்திரிகா முனையமாட்டார்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

(ரோக்கியோ)

ஜனாதிபதி சந்திரிகா எக்காரணம் கொண்டும் ஆட்சியைக் கலைக்க மாட்டார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரோக்கியோவில் வைத்துச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்காவினால் ஐ.தே.மு.ஆட்சியைக் கலைக்க முடியாது. அவர் அவ்வாறு செய்ய மாடடார். இதனால் சமாதான முயற்சிகளை முன்கொண்டு செல்வதற்கு எந்தத் தடையும் கிடையாது எனத் தெரிவித்த அவர்-

யுத்த நிறுத்தம் அமுலாக்கப்பட்டு - யுத்தம் இடம்பெறாததால் நாட்டில் எத்தனையோ உயிர்களை அழிவில் இருந்து காக்க முடிந்துள்ளது எனத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு தனது ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு ஜப்பானில் இருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார். ஜப்பானுக்குச் சென்றிருந்தவேளை, ஜப்பானிய பிரதமர் உட்பட பல உயரதிகாரிகளையும் சந்தித்து இலங்கைக்கான பாரிய நிதியுதவியினை வழங்க வேண்டுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். (01)

# 100 எரிபொருள் நிலையங்கள் இந்திய நிறுவன நிர்வாகத்தில்!

(கொழும்பு)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து 100 எரிபொருள் விற்பனை நிலையங்களை - இந்திய எண்ணெய்க் கூட்டுததாபனம் கையேற்கவுள்ளது.

அடுத்த வருடம் தொடக்கத்தில் இருந்து இவை, இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் வரும். 3 வருடங்களுக்கு இவற்றை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் நிர்வகிக்கவுள்ளது.

நாட்டில் மொத்தமாக 350 எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிர்வகித்து வருகின்றது. இவற்றுள் 100 இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்படுகின்ற அதேவேளை, 125 நிலையங்கள் தொடர்ந்தும் தனியாரிடமே இருந்து வரும் - ஏனையவற்றையே கூட்டுத்தாபனம் நிர்வகிக்கும்.

எரிபொருள் சந்தையில் ஆரோக்கியமான போட்டியை உருவாக்குவதும், நுகர்வோருக்குச் சிறந்த சேவையை வழங்குவதும்தான் இந்திய நிறுவனத்துக்கு 100 எரிபொருள் நிலையங்களை வழங்குவதற்கான காரணங்கள் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் 14 கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன!

வவுனியா மாவட்டத்தில் 14 கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அந்தப் பிரதேசத்தில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் 64 கிராமங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என வவுனியா கண்ணிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே மேற்கண்ட தகவல்கள் அறிவிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி; நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளுடன் பிரிகேடியர் சமரசிங்க, பிரிகேடியர் திலகரத்ன மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்ற வேணடிய 64 கிராமங்களில் 25 கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிகளை எவரும் எதிர்க்க முடியாது

## தவறுகளை சுட்டிக் காட்டுவோம் என்கிறார் ராஜபக்ஸ

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. என்று எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், சமாதான நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதில தவறு எதுவும் இல்லை என்று அவா கருத்து வெளியிட்டுள்ளார்.

காலியில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிபிட்டார்.

மக்கள் ஆதரவினால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பலப்படுத்தப்படும்போது, அரசியல் அமைப்பு சட்ட வரையறைக்குள் அவரால் செயற்பட முடியும் என்று ராஜபக்ஸ மேலும் கூறினார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வலி.மேற்கில் குளங்கள் புனரமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உலக உணவு ஸ்தாபனத்தின் உதவியுடன் வலிகாமம் மேற்கில் இரு குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அராலிப் பகுதியில் உள்ள வண்ணாங்குளம், தொல்புரத்தில் உள்ள பாணாவெட்டிக்குளம் ஆகியவையே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அடுத்த ஆண்டு இச் செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறன. (க)

## கண்காணிப்புக்குழு கொழும்புத் துறைக்கு விஜயம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைத் துறைமுகம் ஊடாக மீன்பிடிக்க அனுமதி கோரி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர் கையளித்ததை அடுத்து, கடந்த புதன்கிழமை அப் பகுதிக்கு விஜயம் செய்த கண்காணிப்புக்குழு அதிகாரிகள், அப் பகுதியைப் பார்வையிட்டதோடு, இராணுவ அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர். (60)

## வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைப் பிரிவில் உள்ள சிறு வீதிகள் பலவற்றைத் திருத்திப் புனரமைப்பதற்குப் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர், பல வீதிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் பிரதேசசபை, அவசர அவசரமாக இவ்வேலைத் திட்டத்தில் இறங்கியுள்ளது.

இதன்படி பின்தங்கிய வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் - பெரிய பளை மத்திய வீதி, கோவானம் வீதி, கலுவில் கிருஸ்ணன் கோயில் வதி, அம்பளை வீதி ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன. (115)

## தென்மராட்சியில் தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(சரசாலை)

தென்மராட்சி பிரதேசத்தில் பாடசாலைகளை விட்டு வெளியேறிய யுவதிகளுக்கான தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை அந்த அந்தப் பிரிவு கிராம அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் எனக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பரராஜசேகரம் அறிவித்துள்ளார். (34)

## அதிபர் நியமனம்

(வடமராட்சி)

தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த அதிபர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு கடந்த முதலாம் திகதிமுதல் அதிபராக கணேசமூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## தென்மராட்சியில் வீதி திருத்தம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

கண்டி வீதியில், கொடிகாமம் தொடக்கம் கைதடிப் பிரதேசம் வரையில் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள வீதியினைத் திருத்தும் பணி "வீதி அபிவிருத்தி அதிகாரசபை"யினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் சந்தைப் பகுதி, புத்தூர்ச்சந்தி, மீசாலைச் சந்தி, கைதடிப்பகுதி ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வீதி பெரியளவில் சேதமடைந்துள்ளது. இதனை திருத்தி அமைக்கும் பணியே தற்போது நடைபெற்ற வருகின்றது. (29)

## மருதடி விநாயகர் உண்டியல் திருட்டு

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் உண்டியல்கள் நேற்று முன்தினம் அதிகாலை திருடர்களால் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் அபகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆலயத்தின் காரியாலயப் பகுதிக்குள் சென்று அங்கிருந்த ஆவணங்கள் மற்றும் தளபாடங்களையும் திருடர்கள் சேதப் படுத்தியுள்ளனர். (40)

# வட - கிழக்கு கல்வி அபிவிருத்தி
# கிளிநொச்சியில் திட்டமிடல் மாநாடு!
## 16ஆம் திகதி முதல் 4 நாட்கள் நடைபெறும்

(நமது நிருபர்)

வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி அபிவிருத்தி தொடர்பான விசேட மாநாடு ஒன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இம்மாநாடு தொடர்ச்சியாக நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

வட- கிழக்குப் பகுதிகளில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி சார்ந்த அபிவிருத்தி தொடர்பாக இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வட-கிழக்கு பகுதிகளில் கடமையாற்றுகின்ற கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் கல்விமான்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போன்ற பலதரப்பட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டிற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளில் கல்விசார் அதிகாரிகள் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# இரண்டரை லட்சம் பனம் விதைகள்
# யாழ். குடாநாடெங்கும் நடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பனை அபிவிருத்திச் சபையினால் இவ்வருடம் இரண்டு இலட்சத்து 55 ஆயிரத்து 975 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையாலும், இராணுவத்தினரால் காவலரண்களும் தடைமுகாம்களும் அமைப்பதற்காகவும் பெருமளவிலான பனைகள் தறிக்கப்பட்டன.

இதனை ஈடுசெய்யும் பொருட்டு பனை அபிவிருத்திச் சபையினால், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் அரச காணிகள் மற்றும் பொது இடங்களில் பனம் விதைகள் நாட்டப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவில் 10 ஆயிரம் பனம் விதைகளும், வேலணையில் 5 ஆயிரதது ஐந்நூறு பனம் விதைகளும், ஊர்காவற்றுறையில் 51 ஆயிரம் பனம் விதைகளும், யாழ்ப்பாணத்தில் 5 ஆயிரத்து 600 பனம் விதைகளும், சங்கானையில் 30 ஆயிரம் பனம் விதைகளும், சண்டிலிப்பாயில் 20 ஆயிரம் பனம் விதைகளும், கோப்பாயில் 20 ஆயிரம் பனம் விதைகளும், கரவெட்டியில் 27 ஆயிரத்து 500 பனம் விதைகளும், பருத்தித்துறையில் 12 ஆயிரத்து 500 பனம் விதைகளும், மருதங்கேணியில் 40 ஆயிரம் பனம் விதைகளும், சாவகச்சேரியில் 33 ஆயிரத்து 875 பனம் விதைகளும் நாட்டப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வருட முடிவுக்குள் குடாநாடில் 5 இலட்சம் பனம் விதைகள் நாட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச)

### தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(மீசாலை)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

2003 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்படவுள்ளதால், சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (25)

# சுயதொழில் முயற்சியாளருக்கு இலங்கை வங்கி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளவர்களுக்கு இலங்கை வங்கி கடன் வசதிகளை செய்து வருகின்றது.

சுயதொழில் செயற்திட்டங்களுக்கமைய அதிகபட்சம் ஒரு லட்சம் ரூபாவரை கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கடன் செயற்திட்டம் இலங்கை வங்கியின் கடன் வழங்கும் விதிமுறைகளுக்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கடன் வசதி தேவையானோர் இலங்கை வங்கிக் கிளைகளுடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க)

### கட்டடம் அமைப்போர் அனுமதி பெற வேண்டும்

(கொக்குவில் மேற்கு)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் புதிய கட்டடங்களை அமைப்பவர்களும், பழைய கட்டடங்களைப் புனரமைப்புச் செய்பவர்களும் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னனுமதி பெற்றே வேலையை ஆரம்பிக்க வேண்டும் என நாவற்குழி உப பணிமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(108)

# 21 ஆயிரம் விதவைகளுக்கும் சமுர்த்தி நிவாரண உதவி

(கொழும்பு)

சமுர்த்தி நிவாரணம் பெறுவோரில் 21 ஆயிரம் குடும்பங்கள்-ஆதரவற்ற விதவைகளின் குடும்பங்கள் என்று சமுர்த்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சமுர்த்தி ஆணையாளர் 2000 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வுகளின்போது, இது கண்டறியப்பட்டுள்ளது. இந்த விதவைகளின் குடும்பங்களுக்கு வைத்திய, சட்ட நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கவுள்ளதாகவும், பொருளாதார ரீதியில் அவர்களை முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் சமுர்த்தி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

### பத்து வறிய பிள்ளைகளுக்கு சேமிப்புப் புத்தகங்கள்

பாஷையூர் ''யூப்பிற்றர்ஸ்'' விளையாட்டுக் கழகம் தனது 25 வருட நிறைவையொட்டி மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை கடந்த வெள்ளிக்கிழமையன்று நடாத்தியது.

இதில் முக்கிய நிகழ்வாக - யூப்பிற்றர்ஸ் கழகம், தமது கிராமத்திலுள்ள மிக வறிய 10 குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு தேசிய சேமிப்பு வங்கியில், சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து, அவர்களுக்கான சேமிபப் புத்தகங்களை வழங்கியுள்ளது.

இத்தூர நோக்குச் சிந்தையை-நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பங்குத்தந்தை யேசுரட்ணம் உட்படப் பலரும் பாராட்டினார்கள்.

# இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அம்புலன்ஸ் படகுக் கட்டுமானம்
## அமைச்சு அதிகாரிகள் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

தீவக மக்களின் நலனுக்காக அங்கு சேவையில் ஈடுபடுத்துவதெற்கென அமைக்கப்பட்டு வந்த அம்புலன்ஸ் படகின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் படகின் கட்டுமானப் பணிக்கென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிதி வழங்க முன்வந்திருந்தது. இதற்கென முதற்கட்ட நிதி வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இப் படகை அமைப்பதற்கு ஒப்பந்தகாரருடன் ஒப்பந்தம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இப்படகிற்கான கட்டுமானப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருகிறது. நேற்றுமுன்தினம் இவ் அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று படகுக் கட்டுமானப் பணி நடைபெறும் இடத்திற்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தது.

### கணினிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றுக்கு தேசிய கூட்டுறவுச் சபை கணினிகளை வழங்கவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் லயனல் சமரசிங்க, ஒன்பது கணினிகளைக் கொழும்பில் இருந்து எடுத்து வந்தார். இவற்றை யாழ்.மாவட்டத்தில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க,லி)

# பாதீனியம் அழிப்பு நடவடிக்கையில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வளர்ந்து வரும் பாதீனியத்தினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி பிரதேசத்தில் அதிகரித்துள்ள பாதீனியத்தினை அழிப்பதற்காக கிருமிநாசினிகளை தெளிக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயத் திணைக்களத்துடன் விவசாய சம்மேளனமும் இணைந்து பாதீனியத்தினை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக விவசாயத் திணைக்களம் இவ்வருடம் ஐந்து இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ச)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : ம.பிரவீன்
முகவரி : கொக்குவில் மேற்கு, கொக்குவில்

இரண்வது அகவையில்



பெயர் : கி.கிருஷாளினி
முகவரி : கற்கோவளம், பருத்தித்துறை

ஏழாவது அகவையில்



பெயர் : சி.துஷாளினி
முகவரி : கோட்டைகட்டியகுளம், மல்லாவி.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.சருண்யா
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


# முழுமையான மின்வசதிக்கு காத்திருக்கும் இடைக்காடு மக்கள்

(அச்சுவேலி)

இடைக்காடு பகுதியில் பல இடங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் அப்பகுதியில் உள்ள மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் வழமைக்குத் திரும்ப முடியாதுள்ளது.

மின்சாரம் பெறுவதற்காக பணம் கட்டியவர்கள் மின்சார சபையுடன் தொடர்பு கொண்டபோது, தை மாதம் இடைக்காடு முழுவதும் மின்சாரம் வழங்கப்படும் என பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் - இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்குமாறு சனசமூக நிலையங்களும், இந்து நெறிக் கழகமும் பல கடிதங்கள் அனுப்பியும்,

- எதுவித பலனும் கிடைப்பதாகத் தெரியவில்லை என அப்பகுதி மக்கள் விசனத்துடன் தெரிவிக்கின்றனர்.

(76)

# வியட்நாம்: பசுமையை நோக்கிப் பயணம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வெடிகுண்டின் தாக்கம் முதலில் கடலோரங்களிலும், தாழ்வான பகுதிகளிலும் துவங்கி, பின் மலைகளை நோக்கி முன்னேறியது. ஜனத் தொகைப் பெருக்கம் இன்னும் முன்னேறியது. 1943 லிருந்து மரங்களின் பரப்பு 43 சதவீதமாகவே இருக்க, காடுகளின் பரப்புக் குறைந்து கொண்டே வந்தது. 1975 -76 -இல் 29 சதவீதமாகக் குறைந்தது. 1983 இல் 24 சதவீதமானது.

காடுகளின் அழிவு வியட்நாமிற்குத் தீவிரப் பின்விளைவுகளை உருவாக்கியது. நாடே பாலைவனமானது. இதனால் உருவான மண் அரிப்பு, நீர்ப்பாசனத்தில் மாற்றம், வெள்ளமும் வறட்சியும், மற்ற நாடுகளைவிடத் தீவிரமாயிருந்தது. அழிக்கப்பட்ட காட்டுப் பகுதிகள் கரம்பாகவே இருக்கின்றன. நாற்பது சதவீத நிலம் விளைச்சலில்லாத வீண் நிலம் என மதிப்பிடப் பட்டுள்ளது.

### புதிய மாற்றம்

புதிய மாற்றங்கள் கொண்டு வந்து, நாட்டையே பச்சைப்பசேலென்று ஆக்க, திட்டம் தீட்டப்பட்டது. 1959-இல் ஹோ சி மின் துவக்கிய 'மரம் நடும் வருடம்' தொடர்ந்து, இப்போது மக்கள் நிறைய மரம் நடுகிறார்கள். அவர்களின் குறிக்கோள் 21 ஆம் நூற்றாண்டுக்குள் நாட்டில் 50 சதவிகித நிலத்தை காடாக்குவதே. அதன் மூலம் சுற்றுச் சூழ்நிலையில் சமநிலை, பலவகை இயற்பியல் குணங்களைக் காத்தல்; மேலும் பூமி வெப்பமடைவதைக் குறைக்க தங்கள் பங்கை நிறைவேற்றுதலே அவர்கள் எண்ணம். 1975-இல் நாடு மறுபடியும் இணைந்த பின், இந்தப் பசுமையாக்கும் திட்டம் பெரும் சவாலாகவே இருந்து வருகிறது.

தொண்ணூறில் நானூறு மில்லியன் மரங்கள் நடப்பட்டுள்ளன. ஒரு ஹெக்ரயருக்கு ஆயிரம் வீதம், நான்கு லட்சம் ஹெக்ரயர்களில் மரம் நடப்பட்டுள்ளது. 1961-90 வருடங்களில் மொத்தம் 5.7 மில்லியன் ஹெக்ரயர்களில் மரம் வளர்க்கப்பட்டது. வருடத்திற்கு ஐநூறு மில்லியன் மரங்களை நடுவதே அவர்களின் குறிக்கோள். ஆனால் தொடர்ந்து கொண்டிருக்கும் காடழிப்புக்கு இது ஈடு கொடுக்க முடியாது. இன்னும் பல மில்லியன் ஹெக்ரயர்கள் நடவுக்கு காத்திருக்கின்றன.

1987-இல் வியட்நாமின் வனநல அமைச்சகம், ஒன்றரை மில்லியன் ஹெக்ரயர்கள் கரம்பாய் இருக்கும் மலைகளில் மரம் நடத் திட்டமிட்டது. குறைந்த தரமுடைய காடுகளையும் புனர்நிர்மாணம் செய்யத் திட்டமிட்டது. பணப்பற்றாக்குறையும், பிற வளங்களின் குறையும் இத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் தடையேற்படுத்தின.

மே காங் டெல்டாவில் உள்ள சதுப்பு நில மற்றும் **Melaleuca** காடுகளே, வேறு எந்தக் காடுகளையும்விட போரில் அதிகம் பாதிக்கப்பட்டன. அவை திரும்பத் திரும்ப ஹெர்பிசைட் தெளிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானது.

தெற்கு வியட்நாமின் - சதுப்பு நிலக் காடுகளில் 124,000 ஹெக்ரயர்கள் ஹெர்பிசைட்டில் அழிந்து போயின. இது நாட்டின் சதுப்பு நிலக காடுகளில் ஐம்பது சதவீதம். இதில் **Rhizophora, Sonnerata, Bruguiera** மற்றும் **Nypa** வகை மரங்கள் அனைத்தும் அழிந்தன. அதனால் மீன் வகைகளும், இறால், மீன் பிடிப்பும் சீர்குலைந்தன.

மோன்டானா பல்கலைக்கழக விலங்கியல் பேராசிரியர் எக்பர்ட் டபிள்யூ. பெ.ஃபர், பாதிக்கப்பட்ட பகுதிகளை 1969, 1971 மற்றும் 73-ல் சென்று பார்த்தார். சதுப்பு நிலக்காடுகளின் ஓரம் - படகில் போகும்போது கூறினார், 'என் வாழ்வில் இது ஒரு அதிர்ச்சிதரும் அனுபவம். நாங்கள் எங்குமே பசுமையாக வாழும் தாவரங்களைப்

**தமிழில்: துளசி**

பார்க்கவில்லை. அங்கே சாவின் கெடியான சாம்பல் நிறமே இருந்தது!'.

சதுப்பு நிலங்களுக்குப் பின்னிருந்த **Melaieuca** காடுகள் வெப்பமான மாதங்களில் தீப்பற்றிக் கொண்டன. பெட்ரோல் குண்டுகளிலும் அவை அழிந்துபோயின.

மேற்சொன்ன இரண்டு மோசமாக பாதிக்கப்பட்ட காடுகள், உள்ளே தொலை தூரத்திலிருக்கும் காடுகளைவிட கொஞ்சம் அதிகமாகவே மீண்டிருக்கின்றன. போருக்குப் பின், ஹெர்பிசைட் பாதித்த பகுதிகளில் சதுப்பு நிலக்காடுகளை வளர்க்கும் முயற்சி துவங்கியது. பரந்த பகுதிகளில் **Rhizophora apiculata** வின் நாற்றுக்கள் நடப்பட்டன. ஆனால் சில மரங்களே பிழைத்தன. மற்றவை அழியக் காரணம், வேர்கள் பற்றிக் கொள்ள முடியாத அளவுக்கு நிலம் இறுகிப் போயிருந்தது.

எண்பதுகளின் துவக்கத்தில் புதிய மரங்களை நடுவது துவங்கியது. அதில் இப்போது எழுபதாயிரம் கன்றுகள் வாழ்கின்றன. சுயமாய் வாழும் சதுப்புநில மரங்கள் இப்போது விறகாகவும், கட்டிட மரமாகவும் லாபம் சம்பாதிக்கின்றன.



**Rhizophora** வின் இலைகள் மீன் மற்றும் பூச்சிகளுக்கு இடையிலான உணவுப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. சகதியிலும், கடல் நீரிலும் விழும் இலைகள் அழுகி, நிறைய சத்தைக் கொடுத்து, நண்டு, நத்தை, இறால், மீன் போன்ற பல உயிரினங்களைக் காப்பாற்றுகின்றன.

இதனால் - மீன் பிடிக்கும் தொழில் மீண்டும் வளர்வதோடு, இறால் பிடிப்பும் ஒவ்வொரு வருடமும் உயர்கிறது. போரில் மறைந்துபோன ஈர நிலங்களில் வாழும் பறவைகள் மீண்டும் திரும்பியிருக்கின்றன. ஏழு முக்கிய பறவைகளின் கூடுகள் இப்போது பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஒவ் வொரு வருடமும் இது உயர்ந்து கொண்டே இருக்கிறது.

### தனித்துவமான பெருங்காடு

சிறிய கெட்டு இலைகளோடு, நேரான தண்டுகளோடு பத்து முதல் இருபது மீட்டர் வரை வளரும் **Melaleuca** மரங்கள் இப்போது - மே காங் டெல்டாவில் தனித்துவமான பெரும் காடாக வளர்கின்றன. முன்னர் தாழ்வான, வெள்ளப்பெருக்குள்ள பகுதிகளில் இம்மரம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ஹெக்ரயர்களில் இருந்தது. இப்போது ஒரு லட்சத்து பதினாராயிரம் ஹெக்கரயர்களே மிஞ்சியிருக்கின்றன. அத்தி மரங்களும், வெள்ளைப் பூக்களுடைய காட்டு மரமும் கூட வளர்கின்றன. இம் மரங்களின் கீழ் கொடிகள் படர்கின்றன. விறகுக்காகவும், நிலச் சீர்திருத்தத்திற்காகவும் தொடர்ந்து வெட்டப்பட்டு **Melaleuca** காடுகள் குறைந்து போயின. கடைசியில் 'பெரணி' தாவரமோ புதர் நிறைந்த **Melaleuca** வோதான் இருக்கின்றன.

வியட்னாம் - போரில் அழிக்கப்பட்டுப்போன பசுமையை மீளக கொண்டுவர, இன்னமும் உயிர்த் துடிப்புடன் போராடிக் கொண்டிருக்கிறது. யுத்தம் ஓய்ந்துபோனாலும் யுத்தத்தின் பாதிப்புக்கள் வியட்னாம் மண்ணைவிட்டு அகலாதவையாக, இன்னும் சில ஞாபகங்களை எச்சசொச்சங்களாக விட்டுவைத்தே வருகின்றன.☆




## மழைகாலம்

ஈரம் வடிந்தோடுகிறது
பதிந்த நிலம்தேடி
வானம் இப்போது வெளுப்பாய்
இப்போது மழைக்காலம்
திடீரென வானம் தலைக்குமேல்
கறுத்து வரும்
சூரியன் ஒளிந்து கொள்ளும்
பறவைகள் பதிந்து பறக்கும்
இப்படித்தான்
திடீரென வரும்
நாளெல்லாம் ரெயின் கோட்டுடன் தான்
வீதியில்.....
எனக்கும் மழைக்கும்
எனக்கும் வானத்துக்கும்
நீண்டவெளி தான்
ஆனாலும் வானம் தலைக்குமேல்
நீர் நூலாய் குத்தியிறங்குகிறது
சதிரம் நனைய
உச்சந்தலையிலிருந்து
உள்ளங்கால் வரை குளிர்கிறது
மூச்சு கடுமையாக இழுக்கிறது
மனது தேறுதல் சொல்லும்
"மழைக்காலம் இப்படித்தான் இருக்கும்"
என்னில் மழை நனையும் போது
மௌனமான குளிராய்
என்னுள் நுழைந்து கொள்கிறது
ஒரு அத்துமீறிய ராணுவம் போல்.

**சத்தியமலரவன்**

## A-9 என நீளும் நினைவுகள்

**பகுதி ஒன்பது**

மைந்தர்கள் வந்து அமர்ந்த மடியெலாம்
மங்களப்பூ மலரத் தொடங்கிட
எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவிய
இடமெலாம் புதுத்தெம்பு தவழ்ந்திட
சந்து பொந்துத் தடையும் அகன்றது.
சற்றிளைப்பாறித் தேறிக்கிடந்திடக்
கண்டி வீதி உயிர்த்தது; ஆம்.... 'முருகண்டி' நாயகன் மகிழ்ந்தான்; சிலிர்த்திட்டான்.
'போக்குவரவு' நிகழ்ந்தால் தெற்குக்குப்
புகையிலையொடு நண்டு, றால், மீன்களை
தூக்கி கொண்டேகும் தூர லொறிகளும்
துள்ளியோடின! துவக்குமுனைகளும்
'சாக்கரண்'களும் சற்று மறைந்திட,
சனநடமாட்டம் ஓங்க..., பெயர்வினைத்
தாக்குப்பிடித்திடப் 'பாஸ்' முறை வந்தது!
பின்னர் எத்தனை 'பாஸ்' வந்து போயிற்று?
வட-கிழக்கிலே ஆறேழு மாதங்கள்
வசந்தகாலமாய் நீண்டன. தொண்ணூறில்
தடல்புடலாய் எழுச்சி வளர்ந்தது.
தமிழுணர்ச்சி தலையெடுத்தாடிற்று.
வடமராட்சியில்.....முன்னரில்லாததாய்
'இந்திர விழா' ஒளியில் மிதந்தது!
அடக்கடவுளே! அத்தனை இன்பமும்
அற்ப ஆயுசாய் ஏன்தான் தகர்ந்தது?



**ஜெயங்கொண்டான்**

# தட்டையான உலகம்

சிறுகதை

இராகவன்

தெய்வத்தின் உலகம் தட்டையானதென்றே எல்லோரும் கருதுகின்றனர். எல்லோரும் என்பது தெய்வத்துடன், கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களையும் முதலில் குறித்து நிற்கும். அது முக்கியமானதும் கூட. இதற்கப்பால் தெய்வத்தின் குணவியல்புகளை அறிந்து கொண்ட எவரும் தெய்வத்தின் உலகத்தை தட்டையானதாகவே கருத இடமுண்டு. தட்டையான உலகத்தை எவரும் அறிந்திருக்க முடியும். அது தொலமி எனப்படும் வானியலாளனால் முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும். அது ஆபத்தான விளிம்புகளைக் கொண்டதாகும். தொடக்கமும் முடிவுமுண்டு. இங்கே பயணம் ஆபத்திலேயே முடிந்துவிடும் எனக் கருதப்படுகிறது. எவ்வாறெனில், ஓரிடத்தில் தொங்கிய பயணம் முடிவின்றி நீளுமானால் முடிவில் ஆபத்தான விளிம்பினை வந்தடைதல் தவிர்க்கமுடியாததாகும். அதன் பின்பான பயணம் முன்னுணரப்படாத பாதளத்தில் தள்ளிவிடும் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். தெய்வம் அந்த உலகத்திலேயே பயணித்துக் கொண்டிருப்பதாக தெய்வத்துடன் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும் கருதுகின்றனர். அதனால் தெய்வத்தின் உலகம் என்பது ஆபதான விளிம்புகளைக் கொண்டிருப்பதுடன் அது தொடக்கமும் முடிவும் கொண்ட முன்னுணரப்படாத பாதளத்தில் தள்ளிவிடக் கூடியது. எனவே, தெய்வம் தனக்கு பின்னர் எந்தச் சுவடுகளையும் விட்டுவைக்காமல், நிரந்தரமாய் அழிந்து போய் விடலாம் என அவர்கள் அடிக்கடி தமக்குள் கதைத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும், அவர்களின் உலகமோ சாதாரணமானதென அவர்களால் கருதப்படுகிறது. அது ஆபத்தான விளிம்புகளைக் கொண்டிருக்கவில்லை என்றும், அதனால் முன்னுணரப்படாத பாதளத்தில் தள்ளிவிட மாட்டாதென்றும் அவர்கள் வியாக்கியானம் செய்யத் தவறுவதில்லை. அதன் வடிவம், வியாக்கியானம் எதற்கும் இடமளிக்காத கோளவடிவானதாகும்.

முன்னுணரப்படாத பாதளத்தில் தள்ளிவிடும் அபாயம் இல்லையென அவர்கள் கருதுவதால் கோள வடிவான தமதுலகில் தமது சுவடுகள் - அழிந்து போகாமல் தொடர்ந்திருக்குமென்றே எண்ணுகின்றனர்.

தெய்வம் எப்போதும் புன்னகைத்தபடியே இருக்கும். மிகவும் செந்நிறமேனி. தலை நரைக்கத் தொடங்கிவிட்டது. விசேடமாக காது மருங்கின் மயிர்கள் முற்றாக நரைத்துள்ளன. மீசை, தாடி எதுவுமில்லை. வெண்மை சார்ந்த அங்கிகளையே அணிந்துகொள்ளும். மௌனம், தங்கம் என்பதை சரியாக உள்வாங்கிக் கொண்ட சுபாவம். அதிகம் கதைப்பதென்றால் தியாகுவுடன் (சக ஆசிரியன்) தான். மற்றப்படி புன்னகைப்பது போல் அல்லது புன்னகைத்தபடியிருக்கும்.

எல்லோருமாக தெய்வத்தின் உலகத்தை கோளவடிவானதாக்க முயன்றுகொண்டிருந்தனர். அவ்விதம் அவர்கள் முயலும் ஒவ்வொருவேளையும் - தெய்வம் புன்னகைப்பதுபோல் அல்லது புன்னகைத்துக் கொண்டிருந்தது. அவர்கள் அனைவரும் தெய்வத்தை பித்தனாகவே கண்டனர். தெய்வத்தின் பிரமச்சாரியத்தின் மீது தமது முழுக்கவனத்தையும் குவித்து விடுபுப்பிடுங்கிய வண்ணமிருந்தனர்.

ஒருமுறை தெய்வம் தவறி கிணற்றினுள் விழுந்துவிட்டது. கால் எலும்பும் சற்று விலகிவிட்டது. மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்திருந்த போதிலும் தெய்வத்தால் எழுந்து நடமாட இயலவில்லை. சகலமும் இருந்தபடியேதான் நிகழ்ந்தது. அப்போதுதான் அவர்கள் "உரிய காலத்தில் திருமணம் செய்திருந்தால் பராமரிப்புக்கு எவ்வளவு வசதியாயிருந்திருக்கும்" என தெய்வத்தை நோக்கிக் கேட்க ஆரம்பித்தனர். "எதையும் உறுதிப்படுத்த முடியாதுள்ள நிலையில், நானும் எனது வாழ்க்கைத் துணையும் கிணற்றினுள் விழுவதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகமாயுள்ளது, அவ்விதம் நிகழுமாயின் இருவரையும் பராமரித்தல் என்பது பாதக நிலையிலிருக்குமல்லவா?" என தெய்வம் அவர்களை நோக்கிக் கேட்க ஆரம்பித்ததும் அவர்கள் மௌனிகளாயினர்.

அவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் விழித்த சிவபெருமான் என தெய்வத்தைக் கருதுவதற்கு குறிப்பிடும் காரணங்கள் வருமாறு-

☆ பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தனது விஞ்ஞானமாணிக்கான கற்கைநெறியினை பூர்த்தி செய்யாமல் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியமை,

☆ எப்போதும் புன்னகைப்பது போல் இருத்தல் அல்லது புன்னகைத்துக்கொண்டிருத்தல்.

☆ எப்போதும் தனிமையிலிருப்பதற்கு விருப்பங்கொண்டிருத்தல்.

☆ தனிமையில் இருக்கையில் மேலே பார்த்தபடி வேறு ஓர் உலகத்தில் சஞ்சரித்தல்

☆ எந்தவிடயம் பற்றியும் கலந்துரையாடும்போது தேவையற்ற வினாக்களைத் தொடுத்தல்.

☆ எப்போதும் தலைகுனிந்தபடியே போக்குவரத்திலீடுபடல்.

கிணற்றினுள் விழுந்த தெய்வத்தைப் பார்வையிட, வந்திருந்த ஆசிரியர்கள் நின்று கொண்டிருந்தனர். ஆசனங்கள் போதவில்லை, வீட்டின் தளப்பரப்பு ஈரலிப்பாயிருந்தது. கொப்பளங்களைப் போல அழுக்குகள் திட்டுத்திட்டாய் தளப்பரப்பெங்கும் பரவியிருந்தது. இரவில் அது வௌவால்களின் வாசஸ்தலமாயிருக்கும் போலும். அங்கங்கே வௌவால்களின் பிழுக்கைகளும் பரவியிருந்தன. வீட்டிலே ஒருவகைத் துர்நாற்றம் வியாபித்திருந்தது. தெய்வம், மரத்தளபாடங்கள் சூழவிருந்த கட்டிலில் புன்னகைப்பது போல் அல்லது புன்னகைத்துக் கொண்டிருந்தது. சூழவிருந்த மரத்தளபாடங்கள் பல்வேறு அலங்காரங்களுடன் தூசிபடிந்து காணப்பட்டன.

"இது எவ்விதம் நிகழ்ந்தது?" வந்திருந்தவர்கள் சார்பில் தியாகு தெய்வத்தைக் கேட்டான்.

"வீட்டினுள்ளே இதே கட்டிலில் படுத்திருந்தேன்.ஓரே புழுக்கமாக இருந்தது. அதனால் காற்று வாங்கிக் கொள்வதற்காக விசாலமான கிணற்றுக் கட்டில் போய்படுத்துக் கொண்டேன். நன்றாக காற்று விழுந்தது. கண்ணயர்ந்துவிட்டேன். பின்னர் நான் திரும்பிப் படுக்க முற்பட்டிருக்க வேண்டும். விளைவு கிணற்றினுள் இருந்தேன்." தெய்வம் மிகச் சாதாரணமாகவே சொன்னது. அவர்கள் அனைவரும் தெய்வத்தை ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டு, கிணற்றினைப் பார்வையிடப் போயினர். கிணற்றுக்கட்டு விசாலமாகத்தானிருந்தது. உள்ளகமும் மிகப் பரந்திருந்தது. நீர் மட்டம் சற்றே உயர்வாக இருந்தது. தெய்வத்தை மூழ்கடிக்கக் கூடிய மட்டம் என்றே தோன்றியது. தெய்வம் தனது ஒவ்வொரு அசைவிலும் தன்னையொரு பித்தனாக நிரூபனம் செய்து கொண்டிருப்பதாக அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டனர்.

தெய்வத்தின் வீட்டிலிருந்து திரும்பிச்செல்லும்போது அவர்கள் தெய்வத்தின் வீட்டிலிருந்து வெளியேறும் வரையில் நரகத்தில் வசித்தாய் உணர்ந்ததாகவும், தெய்வம் இயற்கை உபாதைகளை போக்கவென வைத்திருந்த பிளாஸ்ரிக் வாளி நிரம்பிப் போயிருப்பதாகவும் தெரிவித்தனர். தியாகு அமைதியாய் இருந்தான். தெய்வத்தின் எதிர்காலப் போக்கு எப்படியிருக்கும என்றே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

பிறிதொரு நாள் தியாகு தெய்வத்தை தனிமையில் சந்திக்க நேர்ந்தபோது, தெய்வத்தின் இல்லறவியல் பற்றி வினாவெழுப்பத் தவறவில்லை. 'நானும் திருமணம் புரியும்வரை எதிலும் ஈடுபாடின்றி இருந்தேன். திருமணத்தின் பின்பு எல்லாவற்றிலும் ஈர்ப்பினைப் பெற்றேன். எல்லாவற்றிலும் அர்த்தமிருந்தது. அதனால் தான் சொல்கிறேன். தெய்வம்! நீர் திருமணம் புரிந்துகொண்டால் எல்லாம் மாறிவிடுமல்லாவா?. தியாகு சொன்னது கேட்டு தெய்வம் புன்னகைத்தது அல்லது புன்னகைப்பது போலிருந்தது. பின்னர் தனக்குரிய மெல்லிய குரலில் "எல்லாம் மாறிவிடும் என்பதால்தான் விலகியிருக்கிறேன்" என்றது. தெய்வம் அவ்விதம் சொன்னது தியாகுவிற்கோ பெருவியப்பாக இருந்தது. தெய்வம் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தது. "எனது படுக்கையைச் சூழவுள்ள தளபாடங்கள் உமது பார்வைக்குட்பட்டிருக்கும் என நம்புகிறேன். அவற்றின் அலங்கார வேலைப்பாடுகள் எவ்விதத்திலேனும் உமது மனத்தினைக் கவர்ந்திருக்கலாம். அவ்விதம் கவர்ந்திருப்பின், நான் சொல்வதை விளங்கிக்கொள்ள இலகுவாயிருக்கும். அவை என்னிலும் வயது முதிர்ந்தவையாகும். அவை நான் துயில்கொள்ளும் வேளையில் எனக்காய் விழித்திருக்கின்றன. எப்போதும் தந்தையும் எனக்கு முன்பாக துயின்றுவிடுவார். எனக்கோ அச்சமாய் இருக்கும். அவ்வேளையில் என்னைச் சுற்றியுள்ள இவைதான் ஆறுதலளிக்கும். நீ துயில் கொள், நாங்கள் விழித்திருக்கிறோம் என்று சொல்வதாக உணர்வேன். இவற்றிற்கும் மேலாக வெளியில் இருக்கும் மரங்களும் என்னிலும் வயது முதிர்ந்தவை. அவற்றின் இலைகள் சலசலப்பதைக் கேட்பதில் எனக்கு ஒருவித நிம்மதி. ஏனெனில் அவையும் எனககாய் எப்போதும் விழித்திருக்கும்.

இன்னுமொன்று என்னுடைய கனவில் ஒருவர் அடிக்கடி வந்திருக்கிறார். அவர் இளமையுடன்தான் இருக்கிறார். எனது முகச்சாயல் மிக அதிகமாக உள்ளது. அவர் எனது மூதாதையுள்



ஒருவராய் இருக்கலாம். அல்லது நானாகவுமிருக்கலாம். அவர் பேரரசானாகவே எப்போதும் திகழ்கிறார். எனது படுக்கையைச் சூழவுள்ள மரத்தளபாடங்களின் மத்தியில் அவரது சிம்மாசனம் உள்ளது. இதனால் எனது படுக்கையையே அவரது சிம்மாசனமாகும். மரத்தள பாடங்கள் மனதைக் கவரும் அலங்கார வேலைப்பாடுகளுடனேயே இருக்கின்றன. எனக்கோ மிகவும் பெருமையாக உள்ளது. தியாகு! நீர் சொல்வதைப்போல் திருமணத்தின் மூலமாகத் நிகழும் மாற்றம் எனக்கு மிகவும் அச்சந் தருவதாயுள்ளது. அந்த அச்சம் மரணத்திற்கும் வழிவகுக்கக் கூடுமல்லவா?" தெய்வம் சொன்னதைக் கேட்டு, தியாகு தலையாட்டினாலும், தெய்வம் - "சரியான பித்தன்" என்றே உள்மனம் சொன்னது.

✽

---

# நிலாந்தனின் படைப்பாக்க முயற்சி வடிவங்களை உடைத்து முன்னேறும் பயணம்

ஏ.யதீந்திரா

அண்மையில் வெளிவந்திருக்கும் நிலாந்தனின் வன்னி மான்மியம்' 'யாழ்ப்பாணமே ஓ.... எனது யாழ்ப்பாணமே' ஆகிய இருபடைப்புகளும் பார்வையில் அகப்பட்டன. அவ்விரு படைப்புக்கள் மீதான வாசிப்பின் இறுதியில் என்னுள் எழுந்த சில எண்ணங்களின் வரிவடிவமே இச்சிறுகுறிப்பு. எம்மில் பெரும்பாலான இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய வடிவங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை வகுத்து வைத்திருப்பவர்கள், அவ்விதிகளே எக்காலத்திற்கும் பொருந்துமெனச் சிறுபிள்ளைத்தனமாக நம்பிக் கொண்டிருப்பவர்கள். சிறுகதை என்றால் என்ன?, கவிதை என்றால் என்ன?, நாவல் என்றால் என்ன? அவைகள் எப்படி அமைந்திருக்க வேண்டும். என்பவற்றுக்கெல்லாம் இவர்களிடம் வரைவிலக்கணங்களும் வரையறைகளும் உண்டு. மீறல்களும், கட்டுடைப்புக்களுமே வளர்ச்சி என்பதை இவர்கள் ஒருபோதும் புரிந்துகொள்வதில்லை. ஆனால் சமீபத்தில் வெளிவந்திருக்கும் நிலாந்தனின் மேற்படி இரு படைப்புக்களும் - ஈழத்து இலக்கியச் சூழலிற்கு முற்றிலும் புதிய படைப்புக்கள். ஈழத்து எதிர்கால இலக்கிய முயற்சிகளுக்கு கட்டியம் கூறிநிற்கும் படைப்புக்கள். புதிய தேடல் நோக்குள்ளவர்களும், நவீன இலக்கிய முயற்சிகளுக்கு ஏற்ப ஈழத்து இலக்கியமும் வளர வேண்டுமென அக்கறைப்படுவோருக்கும் - ஆறுதல் அளித்திருக்கும் படைப்புகள்.

அறியப்பட்ட வடிவங்களைக் கட்டுடைத்துக்கொண்டு வெளிவந்திருக்கிறார் நிலாந்தன். தனது மீறல்களுக்கு - நிலாந்தன் கூறும் விளக்கமும், சிந்திப்பும், கவனக்குவிப்புக்கு உரியன. "யுத்தம் என்னை ஜனங்களுக்குள் இறக்கியது. இருக்கின்ற எந்தவொரு வடிவத்திலும் திருப்திப்படாத, எதையும் இறுதி வடிவாக ஏற்றுக்கொள்ளாத, எல்லாவற்றையும் ஏதோ ஒரு கட்டத்தில் கடந்துபோய்விடத் துடிக்கின்ற ஒருவித வேக மனோ நிலையை எனக்குள் அது உருவாக்கியது. இதிலிருந்து வந்தவைகள்தான் எனது இந்தப் பரிசோதனைகள்" என்கிறார் அவர்.

'வன்னி மான்மியம்'- மண்பட்டினங்கள், பாலியம்மன் பற்று அல்லது ஓயாத அலைகள் மூன்று, வன்னி நாச்சியாரின் சாபம், மடுவுக்கு போதல் ஆகிய நான்கு புதுமையான படைப்புக்களை உள்ளடக்கியிருக்கின்றது. இதில் மண்பட்டினங்கள், ஏனைய மூன்று படைப்புக்களிலிருந்தும் மாறுபட்டதும் தனித்துவமானதுமாகும். மண்பட்டினங்கள் படைப்பே கலையிலக்கிய கர்த்தாக்களும் விமர்சகர்களும் திரும்பிப்பார்ப்பதற்குக் காரணமாக இருந்தது. மண்பட்டினங்கள் தமிழர்களின் பூர்வீகத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழர்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் உட்கொண்ட தொடர் வரலாற்றைச் சித்திரிக்கிறது. தமிழர்களின் மீதான ஒடுக்குமுறை பற்றிப் பேசுகிறது. ஆனாலும் தமிழர்கள் வீழ்ந்துவிடப் போவதில்லையென்றும் பறைகிறது.

*அன்பான பெருங்கடலும்*
*ஆதரித்த பெருங்காடும்*
*இறுமாந்திருக்கும் ஒருநாளிலே*
*சில தீர்க்கதரிசிகள் மட்டும்*
*தெரிந்து வைத்திருக்கும்*
*ஒருநாளிலே*
*யாழ்ப்பாணமே*
*ஓ.....யாழ்ப்பாணமே*
*நீ உனது*
*தலைநகரிற்குத் திரும்பிச்*
*செல்வாய்*
*கிளிநொச்சியே.... ஓ... மணலாறே*
*நீ உனது*
*தலைநகரிற்குத் திரும்பிச்*
*செல்வாய்.*

பாலியம்மன் பற்று அல்லது ஓயாத அலைகள் மூன்று, வன்னி நாச்சியாரின் சாபம், மடுவுக்குப் போதல் ஆகிய மூன்று படைப்புக்களும் வன்னியின் வேர்களை ஊடுருவி, வரலாற்றுச் சம்பவங்களையும் ஐதீகங்களையும் நிகழ்காலச் சம்பவங்களுடன் இணைப்பதன் மூலமான பேசுகையாக அமைந்திருக்கிறது. இனவாதிகள் அடிக்கடி பிரஸ்தாபிக்கும் விடயம் எல்லாளன் - துட்டகைமுனு மோதல. இதில் எல்லாளன் தோல்வியுற்றதை தமிழர்களின் தோல்வியாகவே, இனவாதிகள் சித்திரிக்கின்றனர். நிலாந்தன் - எல்லாளனின் தோல்வியை ஆனையிறவின் வீழ்ச்சியோடு இணைக்கிறார். ஒரு நூற்றாண்டுப் பழியைத் தீர்த்த திருப்தியுடன், விரிகிறது கவிவரிகள்.

*யாரங்கே*
*தளபதிகளை மாற்று*
*அஸ்திரங்களை மாற்று*
*வியூகங்களை மாற்று*
*செய் அல்லது செத்து மடி*

*ஓரிரவுக்குள்*
*ஓராயிரம் யானை பலம்*
*எல்லாளர்களுக்கு*
*எப்படிக்கிடைத்தது.*

வன்னி மான்மியம் - வன்னியின பெருமைகளைப் பேசுவது போன்றே, யாழ்ப்பாணமே ஓ... எனது யாழ்ப்பாணமே என்னும் படைப்பு யாழ்ப்பாணத்தின் பெருமைகளையும், யாழ். மக்கள் எதிர்கொண்ட அழிவுகளையும் பேசியிருக்கின்றது. கவிதையாகவும் இடையிடையே விவரண உரைகளாகவும் விளக்கக் குறிப்புகளாகவும் அமைந்திருக்கும் இந்நூல்மூலம் யாழ்ப்பாணம் தொடர்பானதொரு முழுமையான காட்சி எம்முன் விரிகிறது.

நிலாந்தனின் இவ்விரு படைப்புகளையும் பொதுவாக நாம் கவிதைத் தொகுப்பென்றே சொல்லலாம். ஆனால் வழமையான கவிவெளிப்பாட்டு முறையிலிருந்து நிலாந்தனின் பேசுகை வேறுபட்டதும் புதுமையானதுமாகும். வரலாற்று நிகழ்வுகள், ஐதீகக் கதைகள், மக்களின் சமகால வாழ்வியல் இருப்பு ஆகியவற்றின் இணைவே நிலாந்தனின் படைப்பு. சோலைக்கிளியால் பல கவிஞர்கள் பாதிப்புற்றதுபோல் நிலாந்தனாலும் பலர் பாதிப்படையலாம். இப்பொழுதே சிலர் நிலாந்தனால் தாக்கமுற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஈழத்து இலக்கிய உலகில் சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன் தொடர்பாக இருக்கும் பிரேமைகளை நிலாந்தனின் படைப்பாக்க முயற்சிகள் கேள்விக்குள்ளாக்கலாம்.

நன்றி - 'ஞானம்'

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

வரப்புயர நீருயரும், நீருயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயர்வான்.

*- ஔவையார்.*

## நமது நோக்கு

# தங்குநிலையாளரைக் கவனியுங்கள்!

வடக்கு-கிழக்கினைப் பொறுத்தவரை, உடனடியாகக் கவனஞ்செலுத்தப்படவேண்டிய விடயங்களில் ஒன்றாக - வேலைவாய்ப்புப் பிரச்சினை தீவிரம்பெற்று வருகின்றது.

அண்மையில், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி - 83,061 இளைஞர், யுவதிகள் எதுவித வேலைகளுமற்ற நிலையில் இருந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள்- மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 28 சதவீதமானோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- இன்னுமொரு புள்ளிவிபரத்தின்படி, யாழ்.மாவட்டத்தில் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காது - பாடசாலைகளில் இருந்து வெளியேறிய 25,000 இற்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக் களற்று உள்ளதும் தெரியவந்துள்ளது.

உலகளவில் மனித வளத்தின் முக்கியத்துவமும், பிரயோகமும் பற்றிய கவனக்குவிப்பு அதிகமாகியுள்ள நிலையில் - யாழ்.மாவட்டத்தில் இவ்வளவு பெருந்தொகையான மனிதவளம் வெறுமனே வீணாக்கப்படுவதென்பது - அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும்.

அதிலும் - துரித அபிவிருத்தியை நாடிநிற்கும் எமது மண்ணில் - இத்தகையதொரு மனிதவளம் - நாட்டின் அபிவிருத்தியிலோ, முன்னேற்றத்திலோ எவ்வித பங்காற்றுதலையும் தராது - தங்கிநிற்கும் பிரிவாக இருப்பது - அபிவிருத்திசார் வழிமுறைகளுக்குப் பெருந்தடையாக இருக்கப்போவதென்பதும் நிச்சயமே.

இந்த ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை - தங்குநிலையாளர்களாக வைத்திருப்பதென்பது - நாட்டின் அபிவிருத்தி மட்டுமல்ல, சமூகக் கட்டமைப்பின் சீர்செயற்பாட்டுக்கும் முரணானதாகவே அமையும்.

தொழிலற்ற இளைஞர், யுவதிகளின் உளவியற் பிரச்சினைகளும், செயற்பாடுகளும், சமூகம்சார் நடவடிக்கைகளிலிருந்து விலகிச்செல்லும் ஆபத்தை உருவாக்குவதோடு - நாளை இவர்கள் சமூக முரண் செயற்பாடுகளில் (Anti Social Activities) ஈடுபடவும் தூண்டச்செய்யும்.

உலகளாவிய ரீதியில் - வேலைவாய்ப்பின்மையால் எழுந்த பிரச்சினைக்கு, மற்றுமோர் உதாரணமாக எமது பிரதேசமும் மாறிவிடக்கூடாது என்பதில், சம்பந்தப்பட்டோர் கவனஞ்செலுத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உயர்கல்வி நிலையங்களாக - பல்கலைக்கழகமும், தொழில்நுட்ப நிறுவனங்களும் செயற்பட்டு வந்தாலும் - இவை கூட, வேலையற்றோர் பட்டாளத்தை 'பட்டதாரிகளாகவும்', 'தொழில்நுட்ப அறிவு கொண்டோராகவும்' உருவாக்குகின்றனவேயன்றி - தமது நிறுவனங்களில் கற்றலை முடித்துக்கொள்ளும் மாணவர்களை 'தொழிற்தகைமையாளர்களாக' உருவாக்குவதில்லை என்பது கண்கூடு.

இந்த வகையில் - பல்கலைக்கழகப் பட்டதாரிகள் முதல் பாடசாலைக் கல்விவரை பெற்று நீங்குவோர்வரை அனைவருமே - 'வேலையற்றோராக' உலாவுவதே இம்மண்ணில் நடைபெறுகிறதேயன்றி, வேறொன்றல்ல.

எனவே, வட - கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் வேகங்கொள்ள இருக்கும் இவ்வேளையில் - சம்பந்தப்பட்டோர், அதிகாரங்கொண்டோர் அனைவருமே - இப்பாரிய மனிதவளத்தைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

அதேவேளை, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளும் - தம் மனப்போக்குகளில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். தங்கிநிற்பவர்களாகவும், சமூகத்தின் சுமையாகவும் தங்களை நிறுவுவதிலிருந்து விடுபட்டு - தம்மைத் தொழிற்தகைமையாளர்களாக உருவாக்கிக்கொள்ள முன்வரவேண்டும். சுய முயற்சிகளிலும் ஆர்வங்காட்டவேண்டும்.

சமூக அக்கறையுடையவர்கள் - இவ்விடயங்களில் தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்க வேண்டும்.

அனைவரும் இந்தப் பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்து செயற்பட்டால் மாத்திரமே இந்தத் தங்குநிலையாளர்களை - தகுந்த, திறனுள்ள தொழிற்படையாக மாற்ற முடியும். அது - சமூக வளர்ச்சிக்கும் வழிதரும். இது செயற்படுத்தப்படுமா? சமூகத்தின் சுமை தளருமா?.

# நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் இலங்கைக்கு வெளியிலும் 'புலிகளின் குரல்'

(கொழும்பு)

'புலிகளின் குரல்' வானொலி, ஒலிபரப்பை விஸ்தரிக்க நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பெற்றுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிகின்றன.

ஆறு தொன் எடையுள்ள கொண்ரெயினர் ஒன்றில் இந்தத் தொழில்நுட்ப சாதனங்கள் ஓமந்தை ஊடாக கொண்டு செல்லப் பட்டிருக்கின்றது. இதற்குப் பாதுகாப்பாக இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையிலான பொலிஸார் சென்றுள்ளனர்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இந்தக் கொள்கலனை இராணுவத்தினர் திறந்து சோதனையிட முனைந்தபோது, பாதுகாப்பாக வந்த இன்ஸ்பெக்டர் அதற்கு இணங்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அந்தக் கொள்கலன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இந்தக் கொள்கலனை சுங்க அதிகாரிகள், கொழும்பில் சோதனையிட்டபோது, இராணுவத் தொலைத் தொடர்பு சாதனப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் உடனிருந்ததாகவும் தெரியவருகின்றது.

புலிகளால் கொண்டுவரப்பட்ட எப்.எம் ஒலிபரப்பு சாதனங்களுக்கு மேலும் சில உபகரணங்களைப் பொருத்துவதன் மூலம் இலங்கைக்கு வெளியிலும் ஒலிபரப்பை மேற்கொள்ளலாம் எனத் தெரியவருகின்றது. எடுத்துவரப்பட்ட தொழில்நுட்பக் கருவிகளில் எப்.எம் ஒலிபரப்பு மற்றும் அதற்குரிய சாதனங்கள் எம்.பி.எக்ஸ் ஜெனரேற்றர் மற்றும் பல சாதனங்கள் இருந்துள்ளதாகவும் இவற்றை நோர்வே தூதரகம் வழங்கியதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# சர்வதேசத்தின் உதவியால் மக்களிடம் விழிப்புணர்வு!

## அமைச்சர் கரு ஜெயசூரிய கூறுகின்றார்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் சமீபத்திய சமாதான முன்னேற்ற நடவடிக்கைகளைப் பாராட்டிய சர்வதேச சமூகம் அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவியாக 2040 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது என அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

சர்வதேச சமுகம் இந்தப் பெருந்தொகையை வழங்க இருப்பதால் நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும். சமாதானத்தை அடைவது தொடர்பாகவும் துரித அபிவிருத்தியை நிச்சயப்படுத்துவது பற்றியும் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையை உலக நாடுகள் பெரிதும் பாராட்டியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# தனியார் கல்வி நிலைய மாணவர் கோஷ்டி மோதலில் மரணம்

(கொழும்பு நிருபர்)

நுகேகொட களுபோவிலவில் தனியார் கல்வி நிறுவனத்தல் மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் உயர்தர மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வாரத்திற்கு முன்னர் கல்வி நிறுவனத்தின் மேசை தொடர்பாக இடம்பெற்ற வாக்குவாதம் நேற்று முன்தினம் கத்திக்குத்துடனான கொலையுடன் முடிவடைந்தது.

இக்கொலை தொடர்பாக களுபோவில பொலிஸார் 13 மாணவர்களைச் சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளனர். (01)

# ஹக்கீம் - நூர்தீன் மசூர் புத்தளத்தில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நூர்தீன் மசூரிற்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் புத்தள மாவட்டத்திலுள்ள பாலாவியில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

அதன் பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றிய ஹக்கீம் -நூர்தீன் மசூர், சியாதீன் ஆகிய இரு அரசியல் உயர்பீட உறுப்பினர்களும், தம்முடன் இணைந்து செயற்பட வேண்டும், அல்லாதுவிடின் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (01)

# ஸ்ரீலங்கா இராணுவத்தில் 22 மேஜர் ஜெனரல்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தில் மொத்தம் 22 மேஜர் ஜெனரல் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சேவையில இருப்பதாக தெரியவருகின்றது. இராணுவ உயரதிகாரிகளின் சேவைநீடிப்பு, பதவி உயர்வுகள் தொடர்பான சர்ச்சைகள் கிளம்பியுளள நிலையிலே மூத்த இராணுவ அதிகாரிகள் தொடர்பாக புள்ளி விபரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிபரத்தின்படி,

22 மேஜர் ஜெனரல்கள் தற்போது ஸ்ரீலங்கா இராணுவத்தில் பணிபுரிந்து வருகின்றனர். அத்துடன் அடுத்த நிலையில் - 82 பிரிகேடியர்களும், 59 கேணல் தர அதிகாரிகளும், 168 லெப். கேணல் தர அதிகாரிகளும், 1390 மேஜர் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தில் இருப்பதாகப் புள்ளிவிபரங்களில இருந்து தெரியவருகின்றது.

# அதிகார பரவலாக்கல் குறித்து பிக்குகள் லண்டனில் ஆராய்வு

இலங்கையின் பிரபல்யம்மிக்க ஐந்து பௌத்த மத குருமார்கள் - லண்டனில், வட அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஆகியவற்றுக்கான அதிகாரப் பரவலாக்கப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சகத்தின் அழைப்பினை ஏற்று அங்கு சென்றுள்ள இவர்கள் - கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் - பீற்றர் றக்ஸ் உடனேயே லண்டன் சென்றுள்ளனர்.

வண.மாதுளுவெவ சோபித தேரர், வண.இத்தாபன தம்மாலங்கார தேரர், வண.முருதெட்டுவ ஆனந்த தேரர், வண. பனகல உபதிஸ்ஸ தேரர், வண.தினியாவெல பாலித தேரர் ஆகியோரே லண்டன் சென்றுள்ளவர்களாவர்.

# 'கவிக்கோ' அப்துல் ரஹ்மான் அடுத்தமாதம் யாழ்.வருகிறார்!



தமிழ் நாட்டுப் பேரறிஞரும், கவிஞருமான "கவிக்கோ" அப்துல் ரஹ்மான் அடுத்த மாதம் முற்பகுதியல் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

இங்கு வருகைதரும் அப்துல் ரஹ்மான்- பல இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளதுடன, இலக்கிய ஆர்வலர்களுடனான சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகின்றது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளை இவர் நிகழ்த்துவார்.

துர்க்காபுரம் தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி நடை பெறவுள்ள முதலாம்நாள் நிகழ்வில் "கூடும் அன்பு" எனும் விடயம் தொடர்பாகவும், 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்ட பத்தில் நடைபெறும் நிகழ்வில் "சொற்றமிழ் பாடுக" எனும் விடயம் தொடர்பாகவும், அன்றைய தினம் மாலை நடைபெறும் நிகழ்வில் "ஒளி விளங்கும் ஓடு" எனும் விடயம் தொடர்பாகவும் அப்துல் ரஹ்மானின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிஹல உறுமயவில் இணைந்த கங்கொடவல சோமதேரர்

(கொழும்பு)

கங்கொடவல சோமதேரர் சிஹல உறுமய கட்சியில் இணைந்துள்ளார். சிங்கள தேசத்தின் ஒற்றுமையை கட்டி எழுப்புவதற்காகத் தான் சிஹல உறுமயவில் இணைந்துள்ளதாக தேரர் தெரிவித்தார். இது பற்றி சிஹல உறுமய கட்சியின் உதவிச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

தேரர் அங்கத்துவம் வகிக்கும் ஜனவிஜய பவுண்டேசன் சிஹல உறுமயவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது என்றும்,

சிங்களவரின் ஒற்றுமையூடாகச் சிங்களதேசத்தை காப்பாற்றுவதற்கு தேரரின் வருகை முக்கியமானதும் என்றார்.

# பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் நாங்கள்தான் தீர்மானிப்போம்!

## அதாவுல்லா கருத்துத் தெரிவிப்பு

புலிகளுடன் முஸ்லிம்கள் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்துவதற்கு அமைச்சர் ஹக்கீமுக்கு எந்தத் தகுதியும் இல்லை. புலிகளுடனான பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகளாக யார் இடம்பெறுவது என்று தாமே முடிவு செய்யப் போவதாக அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அவரைச் சந்திக்கவுள்ளதாகவும், கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் அரசாங்கத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

# எமது பகுதியில் ஆங்கிலமொழி வழியிலான கல்வி சமூகமயமாக சில வருடங்களாவது தேவை!

**ஐ.சாந்தன் சமகாலத் தமிழிலக்கியப் படைப்பாளிகளில் முக்கியமானவர். தேசிய இனப்பிரச்சினை/ தமிழ் தேசியப் போராட்டம் என்பவற்றுக்கு இலக்கிய வடிவம் கொடுத்து வருபவர். தற்போது இலங்கையில் ஆங்கில இலக்கியத் துறையிலும் தன் முத்திரையைப் பதித்து வருபவர்.**

*கேள்வி:*-ஒரு முக்கியமான எழுத்தாளர் என்ற முறையில் உங்கள் இலக்கிய வாழ்வு குறித்து என்ன சொல்கிறீர்கள்?

*பதில்:*-எழுத்தாளன் என்ற அடைமொழிக்குள் மட்டும் என்னை அடக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. என் பல பரிமாணங்களில் இதுவுமொன்று. பரவலாக, முனைப்பாகத் தென்படும் அடையாளம் இதுவாக இருக்கலாமென்றாலும், எழுத்தாளன் என்பது என் அடையாளங்களில் ஒன்று மட்டுமே. அத்துடன், இன்று வேறெத்தனையோ விஷயங்களைப் போலவும் "எழுத்தாளன்", "கவிஞன்" என்கிற சொற்களும் நீர்த்து, அர்த்தமிழந்து போய்விட்டன. இக்காரணத்தாலும் அந்த அடைமொழியைத் தாங்கத் தயக்கமாவுள்ளது. எப்படியிருப்பினும் - பொறியியல் வரைஞனாக, தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளராக, சுகாதாரத் தொழில்நுட்பவியலாளனாக, கணினி வரைஞனாக, ஆங்கில ஆசானாக, அரசியல் சார்புமிக்கவனாக என்றெல்லாம் என்னைக் காண்கிறவர்களும பல பேர் உள்ளார்கள். இவை எல்லாவற்றுக்குமப்பால், கடந்த கால் நூற்றாண்டாக யாழ்ப்பாணத்துத் தெருக்களில், மோட்டார் சைக்கிளில் ஓய்வின்றி ஓடித்திரிகிற ஒருவனாக மட்டும் என்னைக் காண்கிறவர்களும் பலர் இருக்கிறார்கள். ஒரு விதத்தில் தெரிந்தவர்களுக்கு எனது இன்னொரு அடையாளந் தெரிகிறபோது, 'ஓ, இவர் அப்படியுமா?' என்று கேட்க நேரிடுகிறது. இந்தப் பன்முக ஈடுபாடுகள், என் வாழ்வை அத்தனை மடங்கு சுவாரஸ்யமும், பயனும், அர்த்தமும் மிக்கவையாக்குகின்றன. இவை எல்லாவற்றுக்குமப்பால் எந்த அடைமொழிகளுமின்றி, சாந்தன் என்கின்ற ஒரு மனிதனாகவே இருக்க விரும்புகின்றேன். ஐயாத்துரை சாந்தன்! நீங்கள் கேட்ட இலக்கிய வாழ்வு என்று பார்க்கும் போது அது குறித்து எனக்கு முழு நிறைவே உள்ளது.

*கேள்வி:*- இந்தச் செயற்பாடுகள் ஒன்றையொன்று பாதிப்பதில்லையா?

*பதில்:*- நிச்சயமாக இல்லை. ஏனென்றால் அவை ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. பதிலாக பரஸ்பரம் துணைபுரிகின்றன. ஒன்றின் வெளிச்சத்தில் இன்னொன்றைப் புரிந்து கொள்வது இலகுவாகிறது. செயற்பாடுகளும் செம்மை பெறுகின்றன.

*கேள்வி:*-அப்படியானால், எழுத்து உங்கள் பகுதிநேரச் செயற்பாடு என்றாகிறது. பகுதி நேர எழுத்தாளரால் ஆழமாகச் செயற்பட முடியாது, என்றொரு முணுமுணுப்பு கேட்கத் தொடங்கியிருக்கிறதே?

*பதில்:*- இதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். 'பகுதி நேர எழுத்தாளர்கள் எனப்படுவோரால் அகலமாகச் செயற்படுவது சில சமயம் இயலாது போகலாம். ஆனால், ஆழமாகச் செயற்படுவதை அது எவ்விதத்திலும் தடுக்கப்போவதில்லை. மாறாக, ஆழத்தை அதிகரிப்பதில் அது உதவும்' என்பதே என் துணிவு. ஏனெனில் 'வாழ்வதிலிருந்து' தான் இலக்கியம் பிறக்கிறது. இலக்கியத்துக்காக மட்டுமே வாழ்வதென்பது - இயல்பான பிற சமூகக் கடமைகளின்று ஒதுங்குவதென்பது- அசாத்தியம். இப்படிப் 'பிறக்கிற' இலக்கியங்களில் ஆழம் மட்டுமல்ல, ஆரோக்கியமுமிராது. வாழ்க்கை என்ற செய்முறையில் இலக்கியம் என்பது எப்போதும் உப -உற்பத்திப் பொருளாவது மட்டுமே சாத்தியம். பிறமொழி இலக்கியச் செயற்பாடுகளை அறிய நேர்கையில், இச் சந்தேகங்கள் எழா. தவிர, என்னைப் பொறுத்தவரையில் இலக்கியம், எழுத்து-என்பவை என் சுயம் சம்பந்தப்பட்டவை. அவற்றை என் நிறைவிற்காக, மகிழ்விற்காக விரும்பும் போது மேற்கொள்கிறேன்.




*கேள்வி:*- என்றாலும் தமிழில் தங்கள் எழுத்துச் செயற்பாடு குறைந்து விட்டதாகப்படுகிறதே?

*பதில்:*- சரிதான். எனினும் என் எழுத்துச் செயற்பாடுகள் குன்றிவிடவில்லை. மொழி/ஊடக மாற்றம் மட்டுமே நிகழ்ந்திருக்கிறது. ஆங்கிலத்தில் எழுதுவதில் தற்போது அதிக ஈடுபாடு தோன்றியுள்ளது. 'அது ஏன்?' என்று கேட்க வருகிறீர்கள். சொல்லுகிறேன்; பல காரணங்கள்: ஒன்று, தமிழில் சிறுகதையைப் பொறுத்தமட்டில்-உருவம், உள்ளடக்கம் இரண்டிலுமே என் தனித்துவமும் பங்களிப்பும் பற்றி எனக்கு திருப்தியுள்ளது. இரண்டாவது, 'ஈழத்தமிழ் இலக்கிய உலகு', நான் எழுதத் தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை எந்த மாற்றமுமின்றி அப்படியே நிற்கிறது என எனக்குப் படுகிறது. அதே போக்குகள், அதே பேச்சுக்கள், அதே எழுத்துக்கள், அதே தோரணைகள். இன்னமும் இதற்குள்ளேயே இருந்தால் என் இயல்பான லயிப்புக்களான இலக்கியமும், எழுத்துங்கூட வெறுத்து விடுமோ எனப் பயமாக இருந்தது. மூச்சுத் திணறுகிற மாதிரியுமிருந்ததால், சற்றுப் புதுக்காற்று நாடி வெளியே வரலாம் போலவும் இருந்தது. மூன்றாவது, ஆங்கிலத்தில் எவ்வளவுதான் கொஞ்சமாக இருந்தாலும் - எம்மை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்தேன். எவரெவரோ எழுதிய அபத்தமெலாம் 'ஈழத் தமிழர் வாழ்வென' ஆங்கிலத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. எனவே இம்மண்ணின் சொந்தக் குரலை ஒலிக்க முயன்றேன். எண்ணிக்கையில் குறைந்தாலும், என் எழுத்திற்குக் கிடைத்த வரவேற்பு பெரும் உற்சாகந்தருவதாயுளளது. அதே வேளை, கூடவும் ஒரு பயம். அந்த கணிப்பிற்கும் எதிர்பார்ப்புக்குமேற்ப இனியும் எழுத வேண்டுமே என்ற எச்சரிக்கை. நாலாவதாக, ஆங்கிலத்தில் எழுதும்போது கிட்டுகிற பரந்தவாசகர் எல்லை. இவையெல்லாம் ஒரு புறமிருக்க, என்னைப் பொறுத்தளவில், இலக்கயம் - எழுத்து என்பது ஒன்றேதான். அதை மொழிவாரியாகப் பிரிப்பதெல்லாம், நமது வசதி கருதி; கடவுளை மதங்கள் பிரித்துக் கொள்கிற மாதிரி, இலக்கியத்தை மொழிகள் பிரித்துக் கொள்கின்றன என்றே எனக்குத் தோன்றுகிறது. இலக்கியம் இலக்கியந்தான். எழுத்தை, இலக்கியம் - இலக்கியமல்லாதது என்று மட்டுமே பிரிக்க முடியும். மற்றப் பகுப்புகள் யாவும் அர்த்தமற்றவை. இதே போலத்தான் எழுதுகிறவர்களையும், முற்போக்கு - பிற்போக்கு, ஆண் - பெண், வட்டாரம்-பிரதேசம், மொழி - தேசம் என்றெல்லாம் பிரித்துவிடமுடியாது. நல்லது எழுதுகிறவர்கள்- நல்லதல்லது எழுதுகிறவர்கள் என்று மட்டும் தான் பிரிக்க முடியும். சரி,இப்படியெல்லாம் சொல்வதால் தமிழில் இனி எழுதமாட்டேன் என்று சொல்ல வரவில்லை. அது என் இயல்பு. உந்துதல் எழுகையில் வெளிப்பாடு நிகழும். எழுதுவதற்கும் நிறைய உண்டு.

*கேள்வி:*- சமகால இலக்கிய வரலாற்றுப் பதிவுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:*- அப்படிச் சொல்லத்தக்க எதுவும் சமகால ஈழத்தமிழிலக்கிய வரலாற்றைப் பற்றி வந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பெயரில் வந்தவையும் தத்தம் சொந்த விருப்பு - வெறுப்பு, காழ்ப்புகளுக்கேற்ப வரலாற்றை வளைக்க முனைநதவையாக அமைந்தனவேயன்றி, சரியான தகவல்களை நடுநிலை நின்ற பதிவு செய்தனவாக இல்லை. ஆனால் ஒன்று, இது ஏட்டுச் சுவடிக்காலமல்ல; இன்ரநெற் காலம். எழுத்துக்களையும், பங்களிப்புக்களையும், செயற்பாடுகளையும் மூடி மறைத்துவிடல் முடியாது. மேலும், எதிர்காலத் தலைமுறை எம்மிலும் விவேகமிக்கதாகவே இருக்கும். அவ்வேளையில் இப்போதைய திரிப்பாளர்களின் அறியாமையோ, நேர்மையீனமோ அல்லது இரண்டுமோ - எள்ளி நகையாடப்படும். எடுத்து வீசப்படும். இது பற்றி உங்களுக்குச் சந்தேகம் வேணடியதில்லை.

*கேள்வி:*-கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர் என்ற வகையில், இன்று மீண்டும் கவனம் பெறும் தாய்மொழி வழிக் கல்விப் பிரச்சினைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:*- தாய்மொழி வழிக் கல்வியென்பது, இயல்பானதும், ஆரோக்கியமானதும் மட்டுமன்றி, அடிப்படை உரிமையுமாகும். அதை மறுத்தலாகாது. எனினும், வேறிரு விஷயங்களையும் இங்கு சேர்த்து நோக்க வேண்டியுள்ளது. மொழி என்பது பழக்கத்தால் வருவது. சிந்தனைக்கு மொழி கிடையாது. தமிழில் சிந்திப்பது, ஆங்கிலத்தில் சிந்திப்பது என்றெல்லாம் படித்தவர்கள் என்போர்



**ஐ.சாந்தன்**

கூடக் குறிப்பிடுகிறார்கள். எவ்வளவு அபத்தம். (பிறவியிலேயே முழுச் செவிடானவர்கள் சிந்திப்பதில்லையா?) சிந்தனை என்பது பழக்கத்தின் நிமித்தம் கிட்டியமொழியில், தொற்றுவதே தெரியாமல் - தொற்றிக் கொண்டு வெளிப்பாடு கொள்கிறது, மின்னல் போல. இன்னமும், ரஷ்யாவுக்குப் போய் அங்கு ரஷ்ய மொழி கற்றுக்கொண்டு மருத்துவமும், பொறியியலும் பயில்கிற மாணவர் தொகை கணிசமானது என்பதை நாம் கவனிக்கலாம். இரண்டாவது விஷயம் முக்கயமானது; எமக்கென்று சொந்த விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆய்வுத் தேடல் என்றெதுவுமேயின்றி, இன்னமும் பிறநாட்டார் நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழிற் பெயர்த்து (கண்டுபிடிப்பது அவர்கள், மொழி பெயர்ப்பது நாங்கள்) அவற்றையே போதிப்பதென்பது இரவல் புடவையில் கொய்யகம் விடுகிற மாதிரித்தான். ஆனால் ஆய்வறிவுத் திறன் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை முந்தியா, கல்வி முந்தியா என்பது - கோழியா, முட்டையா என்பதில் முடியலாம். எனினும், இன்றைய எம் அமைப்பில் கல்வியென்பது அறிவு நாட்டமில்லாது; வெறும் பட்டம், பதவி, வெளிநாடு என்று பறதியைத் தருகிற தாய் மட்டும் இருக்கும்போது, அது எந்த மொழியிலிருந்தாலென்ன என்றும் நினைக்கத் தோன்றுகின்றது.

**நேர்காணல்- எஸ்.சரந்தகுமார்**

---

# பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு தடையாகவுள்ள தனங்களப்பு-மறவன்புலோ உயர் பாதுகாப்பு வலயம்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 10 மாதங்கள் ஆகிவிட்டன. அமைதிச் சூழல் ஏற்பட்டது, ஆனால் மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும் திரும்பவில்லை.

இயல்பு வாழ்க்கை என்பது எமது மண்ணில் நிலைகொண்டுள்ள இராணுவம் வெளியேற்றப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழ மீளக்குடியமர்த்தப்பட வேண்டுமென்பதாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக மீண்டும் தமது சொந்த மண்ணுக்குத் திரும்புவோம் என, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள- தனங்களப்பு, மறவன்புலோ மக்கள் ஆதங்கப்பட்டார்கள். 17 வருட கால அவல வாழக்கைக்கு முடிவு கிட்டும் என நம்பிக்கை கொண்ட மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்கள், விளை நிலங்களில் இருந்து இராணுவத்தை முற்றாக வெளியேற்றி, தம்மை தமது பகுதிகளில் அரசு குடியமர்த்தும் என நம்பிய மக்களின் மனதில், அரசு மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புக்களை அதியுயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்து, மக்கள் மீள் குடியமர்வதைத் தடுப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாகும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மூன்று கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கிய தனங்களப்பு, மறவன்புலோ உயர்பாதுகாப்பு வலயமும் ஒன்றாகும். இவ்வலயம் 25 சதுர கி.மீ. பரப்பளவை கொண்ட 52ஆவது இராணுவ படையணியை உள்ளடக்கியுள்ளது. இக்கிராமங்களில் 700க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். உற்பத்திச் செய்கைக்குரிய நிலப்பரப்பு 2500 ஏக்கர்களுக்கு மேற்பட்டவை. இங்கு 500க்கு மேற்பட்ட விவசாய குடும்பங்களும், 200க்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்களும் குடியிருந்தன. இவ் வலயத்தில் பயனற்றிருக்கும் கடற்கரையின் தூரம் 12 கி.மீ.. இங்கு 20 ஆலயங்களும், 2 பாடசாலைகளும் உள்ளன.

இந்தப் பாடசாலைகளில் கற்கும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நகர்ப்புற பெரிய பாடசாலைகளில் அனுமதி பெற முடியாத பொருளாதார நிலையில் உள்ளவர்கள். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பகுதி நேரம் தமது விளைநிலங்களில் தொழில் செய்பவர்களாவார்.

கடந்த 2000ஆம் ஆண்டு யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்ததில இருந்து இப்பகுதி மக்கள்- இன்றுவரை வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் வசித்து வருகிறார்கள். வீடுகளைப் பார்வையிடவோ, அவற்றிலிருந்து பொருட்களை மீட்கவோ அனுமதிக்கப்படவில்லை. இடப்பெயர்வின் போது நல்ல நிலையில் உள்ள வீடுகள், வளவுகளில்

**செய்திக் கட்டுரை**



இருந்த பெறுமதிமிக்க பொருட்கள், கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் அபகரிக்கப்பட்டுவிட்டன.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவினர் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வீடுகளுக்குச் சென்று நிலமைகளை நேரடியாக ஆராய்ந்து, மக்களின் தேவைகளைப் பொறுத்து மேற்படி குழுவினரின் சிபார்சின்ப்டி ரூ.15,000 வழங்கப்பட்டு வருகின்றது. இவ்மீள்குடியமர்வுக் கொடுப்பனவு இப்பகுதி மக்களுக்கு எப்போது கிடைக்கும்?

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் இடம்பெயர்ந்திருந்த ஆயிரம் குடும்பங்கள் மீளவும் தமது சொந்த மண்ணுக்குச் சென்று தமது புதிய வாழ்வு ஒன்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போது, இம் மக்களின் இயல்பு வாழ்வுரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது. தமது எதிர்காலத்தின் மீது இம் மக்கள் அவநம்பிக்கை கொள்ள இவ் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அமைந்து விடக்கூடாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுப்பார்களா?

~ ஜெகதீபன் ~

## மீன் சந்தையாக மாறும் சண்டிலிப்பாய் வீதி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னால் பிரதான வீதியருகில் தினமும் 25ற்கும் மேற்பட்ட மீன் வியாபாரிகள், மீன் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இப்பகுதி ஒரு மீன் சந்தையாக மாறிவருவதுடன், மக்களின் போக்குவரத்துக்கும் இடையூறாக மாறியுள்ளது. (41)

## ஆனந்தாக் கல்லூரி உதைபந்தாட்ட அணி வருகிறது

கொழும்பு ஆனந்தாக்கல்லூரி உதைபந்தாட்ட அணி நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, யாழ். மத்திய கல்லூரி அணியுடன் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் அணியில் ஆனந்தாக்கல்லூரியில் சிறந்த வீரர்கள் இடம்பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவத்தமிழ்ச் செல்வியின் 78 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 78 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா எதிர்வரும் 7,8 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி தமிழ் நாட்டு பேரறிஞர் "கவிக்கோ" அப்துல் ரகுமானின் சிறப்புச் சொற்பொழிவும்,

பிறந்த நாள் அறநிதிய வட்டிப் பணத்திலிருந்து தீவகக் கல்வி வலயத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும்-க.பொ.த.சாதாரண தர வகுப்பில் கல்விகற்கும் 150 மாணவர்களுக்கு பாடசாலைக் கல்விக்கான உபகரணங்களுக்காக தலா 400 ரூபாவும் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

# சமாதானத்தைத் தழுவிநிற்கும் புலிகளை உலகம் அங்கீகரிக்க ஆரம்பித்துவிட்டது!

**ஒஸ்லோவில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்த மாவீரர் நாள் நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்திய உரையின் முதற்பகுதி இங்கு தரப்படுகிறது.**

ஒரு போராளி என்னைக் கேட்டார். நீங்கள் சண்டையை விரும்புகின்றீர்களோ? சமாதானத்தை விரும்புகின்றீர்களோ? என்று. நான் கூறினேன், சண்டையைத்தான் விரும்புகின்றேன் என்று. அந்த நாளில் தானே நான் ஓய்வாக இருக்கலாம். சமாதானக் காலத்தில் எனக்கு ஒய்வே இல்லை. கிட்டத்தட்ட [illegible]ன்று வருடங்களிற்கு முன்னர் [illegible]த ஒஸ்லோவில் ஆஸ்பத்திரியில் கடுமையாக சுகயீனமுற்றிருந்தேன். அந்தநேரம் வெளியில் பார்ப்பேன். பனிமூட்டமாக இருக்கும். அந்த நேரத்தில் நான் பிழைப்பேனோ எனத் தெரியாத இக்கட்டான நிலையில் சோர்வுற்றிருந்தேன். என்னவோ தப்பிப்பிழைத்து உங்களிற்கு முன்னால் நிற்கிறன். இங்கு என்ன சொல்ல விரும்பிறன் என்றால்.... இங்க வசிக்கிற தமிழ் மக்களாகிய நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சமாதான முயற்சிகள் கடந்த சில மாதங்களாக நடைபெறவில்லை. மூன்று ஆண்டுகளிற்கு முன்பாக நோர்வே இராஜதந்திரிகளால், சமாதானத் தூதுவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பெரிய முயற்சி. இது எப்போது நடந்தேறியதென்றால் வன்னியில் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தபோது, ஆபத்தான நிலையில் இருந்தபோது, என்னை வன்னியிலிருந்து வெளியே எடுத்து வந்து வெளிநாடுகளில் வைத்து சிகிச்சை செய்வதற்காக நோர்வே அரசாங்கம் மூன்று ஆண்டுகளிற்கு முன்பே முயற்சியெடுத்தது. என்னைப் பற்றி யார் சொன்னதென்றால், காலஞ்சென்ற ஹமீத் அவர்கள், இந்த நோர்வே அரசாங்கத்திற்குச் சொன்னார். பாலசிங்கம் என்றொருவர் இருக்கின்றார். இவரை எப்படியாவது நீங்கள் காப்பாற்றி, அவரின் உயிரை மீட்டால்தான் எப்பவோ ஒருநாள் இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாம். அவர் ஒருவர் உயிரோட மீண்டு வந்தால்தான், இந்தச் சமாதானப் பாதையைத் திறக்கலாம். ஆகவே, அவரிற்கு உதவி செய்யுங்கள் என்று காலம் சென்ற ஹமீத் அவர்கள் கூறியுள்ளார். அவர் முன்பு வெளிவிவகார அமைச்சராக இருந்தவர். என்னை அவரிற்கு நன்கு தெரியும். கொழும்பில் நடைபெற்ற பிறேமதாஸா பேச்சுவார்த்தையின் போது அவரிற்[illegible] எனக்கும் இடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டது. அப்பொழுது அவரின் ஆலோசனையின் அடிப்படையில்தான் நோர்வே அரசு எனக்கு உதவிசெய்ய முன்வந்தது. எப்படியாவது இவரை வெளியில் எடுக்க வேண்டுமென்று அந்த முயற்சியிலிருந்து, லண்டனுக்குத் தப்பிப் பிழைத்து வந்த காலத்திலிருந்து, நோர்வே அரசு என்னுடன் தொடர்பு கொண்டு சமாதான முயற்சிக்கான அடித்தளத்தைப் போட்டுவந்தது. அதில் குறிப்பாக, ஆரம்பகாலத்தில் உள்ள நோர்வே இராஜதந்திரிகளைப் பொறுத்தவரையில் எரிக் சொல்ஹெய்ம் மிகவும் முக்கிய பங்குவகித்தவர். இவர் அடிக்கடி லண்டனிற்கு வருவார். லண்டனிற்கு வந்து என்னுடன் கலந்துரையாடுவார். இலங்கை அரசியல் நிலைமை பற்றிப் பேசுவார். எப்படியாவது சமாதானப் பேச்சுவார்த்தையை முன்[illegible]டுக்கவேண்டுமென்று முயற்சிப்[illegible]ர். அப்பொழுது நான் அவரிற்கு முதலில் சொன்னேன். நான் முதலில் இந்த வியாதியிலிருந்து மீளவேண்டும். அதன் பின்னர்தான் உருப்படியான சமாதான முயற்சிகளைச் செய்யலாம் என்று. ஆகவேதான், நோர்வே அரசாங்கம் என்னை இங்கு கொண்டு வந்து எனக்கு சிகிச்சை அளிப்பதற்கான சகலதையும் செய்தது. ஒரு போராளி தனது சிறுநீரகத்தை எனக்குத் தானம் செய்து, சத்திரசிகிச்சை நடந்தது. அந்தப் போராளியின் அர்ப்பணிப்பால், நான் உயிரோடு நின்று உங்கள் மத்தியில் பேசிக் கொண்டு



நிற்கின்றேன். எனக்கு சத்திர சிகிச்சை நடந்த அதேமாதம், அதே கால கட்டத்தில், இலங்கையின் முன்னாள வெளிவிவகார அமைச்சர் திரு.கதிர்காமரிற்கும் சத்திரசிகிச்சை நடக்கின்றது. இதனை வடிவாக் கவனியுங்கோ. முக்கியமான விசயம். அவரிற்கு சிறுநீரகத்தை தானம்செய்தவர் புத்தபிக்கு. அவரிற்கு, புத்தபிக்குவின் சிறுநீரகம் பொருத்தப்பட்டு அவர் உயிரோடு எழுந்தார். எனக்கு ஒரு விடுதலை வீரன், விடுதலை வேங்கையின் சிறுநீரகம் பொருத்தப்பட்டு நான் இங்கு உயிரோடு இருந்தேன். கதிர்காமரின் உடம்பில் சிங்களப் பேரினவாத இரத்தம்தான் ஓடுது. என்ர உடம்பில ஒரு விடுதலை வேங்கையின் இரத்தம் ஓடுது. அப்ப இந்தக் கள்ளக் கதிர்காமர் யாரிற்காகப் பேசுவார்? அவன் சிங்களவனிற்காகத்தான் பேசுவான்.

எது எப்படியோ. உயிரோடு எழுந்தேன்... இராஜதந்திர முயற்சிகள் தொடங்கியது. கள்ளக் கதிர்காமர் எல்லா நாடுகளிற்கும் சென்று புலிகளைத் தடைசெய்ய வேண்டும். புலிகள் பயங்கரவாதியள். இவர்களை முற்றாக அழிக்க வேண்டுமென்று சொல்லி, நாடு நாடாகச் சென்று, ஒவ்வொரு நாட்டிலும் விடுதலைப் புலிகளைத் தடை செய்து கொண்டு வந்தார். நான் லண்டனிலிருந்து அடிக்கடி ஒஸ்லோவிற்கு வந்து போவன். நோர்வே இராஜதந்திரிகளைப் பிடித்து, எப்படியாவது சமாதான முயற்சிகளிற்கான அடித்தளங்களைப் போட்டுக் கொண்டு வந்தம். அப்படியான முயற்சியில்தான் திரு. எரிக்சொல்ஹெய்ம் அவர்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நோர்வே இராஜதந்திரி, மிகவும் நல்ல மனிதர். அவரை வன்னிக்கனுப்பினம். அங்கு தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்திக்க ஒழுங்கு செய்தம். அதொரு முக்கியமான சந்திப்பு. அந்தச் சந்திப்பைத் தொடர்ந்து எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் உடன் அமெரிக்காவிற்கு அழைக்கப்பட்டார். ஏன் போனாரெண்டு சொன்னால், அமெரிக்காவில் உள்ள இராஜாங்க அமைச்சின் சந்தேகங்கள். பிரபாகரன் எப்படிப்பட்டவர்?, இவர் பாலசிங்கம் எப்படிப்பட்டவர்?, இவர்கள் உண்மையில் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண்டவர்களா? அல்லது உலகத்தை ஏமாற்றப் பார்க்கின்றார்களா? இவர்கள் பயங்கரவாதிகள் என்று சிங்கள அரசாங்கம் சொல்லுதே?. இதில் ஒரு முக்கிய கட்டம். இதில் எரிக் சொல்ஹெய்ம் என்ன சொல்கின்றாரென்றால் பிரபாகரன் அவர்கள் நீதியான சமாதானத்தை விரும்புகின்றார், எனக்கு அவரில் நம்பிக்கை இருக்கின்றது என்றார்.

எத்தனையோ கேள்விகளைக் கேட்டபோதும் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்புகின்றனர் என்று அவர் சொன்னார். இது எப்படியோ கள்ளக் கதிர்காமரிற்கு தெரியவந்தது. அங்கு போன சிங்கள அதிகாரி ஒருவர் அறிவிச்சுவிட்டார். எரிக், வந்து அமெரிக்காவின் உயர்பீடங்களில் பிரபாகரனிற்காகவும், பாலசிங்கத்திற்காகவும் பரிந்து பேசுகின்றார். இதென்ன நோர்வே அரச பிரதிநிதி, இப்பிடிச் சொன்னால் உங்கட பிரச்சாரமெல்லாம் அடிபட்டுப் போயிடுமே என்று சொல்லியிருக்கின்றார். உடனே கள்ளக் கதிர்காமர் சந்திரிகா அம்மையாரிட்டை ஓடியிருக்கிறார். உடனடியாக இவரை வெளியில போடவேணும். இல்லாட்டில் புலிகளிற்கு சாதகமாக இவரின் பிரச்சாரம் இருக்கும். உடனே, நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் கதைத்து எரிக்கை வெளியேற்றினார். எனக்கும் எரிக்கிற்கும் நெருக்கம் என்கிறார்கள். நானும் தலைவரும் ஒரு அடி கொடுத்தம். சமாதான முயற்சிகளை கொண்டுவராத பட்சத்தில் நாங்கள் நோர்வேயின் முயற்சிகளை ஏற்க மாட்டோமென்றோம். இந்த நிலமையில ஒரு புதிய அரசு வந்தது. அவர்கள் எங்களை அணுகினார்கள். நாங்கள் திட்டவட்டமாகச் சொன்னம். திரு. எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும். எங்களுடைய தலைவரின் விருப்பமும் அதுதான். அப்பிடி நியமிக்கப்பட்டால்தான் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாமென்று சொன்னோம்.

அதன் பிரகாரம், சிறீலங்கா அரசுகளின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் எரிக் நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் புதிய அரசு ஆட்சிப்பீடமேறியது. அந்தப் புதிய அரசு மக்களிடமிருந்து சமாதானத்திற்கான ஆணையைப்பெற்று, இந்தச் சமாதான முயற்சிகளை மேலும் முன்னேற்றகரமான முறையில் முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. ஆகவே, மீண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம், இந்தப் பேச்சுவார்த்தைகளில் புலிகள வெற்றிகளை ஈட்டியுள்ளனர். சில உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றது. அதனை நாம் வரவேற்றோம். நோர்வே செய்த மதிநுட்பமும் சாணக்கியமும் இதற்குக் காரணம். விடாமுயற்சியாக, ஒற்றுமையாக, பேச்சுவார்த்தையில் ஒரு சமரச உறவை ஏற்படுத்தி, இந்த முயற்சியைத் தொடர்வதால்தான் நாம் பெரிய இராஜதந்திர வெற்றியைப் பெறமுடிந்தது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் நோர்வே அரசை, இந்த நோர்வேயின் தலைநகரில் வைத்து பாராட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சென்றவாரம், இந்த ஒஸ்லோவில் பெரிய உலக மகாநாடு நடந்தது. அதில் நான் உரையாற்ற வேண்டியிருந்தது. அமெரிக்க உயர் அதிகாரி ஒருவரும் உரையாற்றவிருந்தார். அப்பொழுது நாற்பது நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருந்தார்கள். அவர்களிற்கு முன்னால் நான் வீற்றிருக்கின்றேன். அவர் என்னைப் பார்த்துச் சொன்னார், விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கைவிடவேண்டும் என்றார்.

கைவிடுவோம் எனப் பகிரங்கப் பிரகடனம் செய்ய வேண்டும் - அவ்வளவு ஆட்களிற்கு முன்னால் அவர் சொன்னார். இதனுடைய விளக்கம் என்னவென்றால் - காகம், நரியின்ர கதை தெரியுமோ? காகம் வடைய வாயில வைத்துக்கொண்டிருந்ததாம், அப்ப நரி வந்து சொன்னது. உன்ர அழகான வாயால பாட்டுப் பாடென்று. காகம் பார்த்தது, நரி தன்னை அழகென்று சொல்லிப் போட்டுதென்று வாயப் பிளந்தது. அப்ப வடை விழுந்தது. அது மாதிரித்தான், பாலசிங்கம் என்ற காகம் இருக்க, அமெரிக்கா என்ற நரி சொல்லுது - பாட்டு பாடென்று... அவற்ற நோக்கம் என்னவென்றால், வன்முறையைக் கைவிடென்றால், ஆயுதத்தைக் கீழ வை என்றதுதான் அர்த்தம். அப்ப பாலசிங்கம் என்ற காகம் என்ன செய்யுதென்றால், வாயில உள்ள வடைய காலல வைத்துக் கொண்டு பாடுது. அப்ப நான் என்ன பாட்டுப் பாடுறன்.. ஐயா... தமிழ் மக்களிற்கு உரிமை உள்ளது, அது அவர்களிற்கு கிடைக்க வேணும். அவர்களின் அபிலாசைகள் நிறைவேற வேண்டும். சமாதான வழியில் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். இப்படியாக எமது மக்களின் அபிலாசைகள், சுதந்திரம், கௌரவம் பேணிப் பாது காக்கப்பட்டதும் நாங்கள் போடுறம். அதுமட்டும் நாங்கள் காலுக்குக் கீழேதான் வைச்சிருப்பம் என்று என்ர பாணியில் அவரிற்கு பதில் சொன்னன். அமெரிக்காவிற்கும் புலிகளிற்கும் இடையில் ஒருமைப்பாடு இருக்கு, அதனைப் புரிஞ்சுகொள்ளுங்கோ. என்ன ஒருமைப்பாடு?

அது அமெரிக்காவிற்கும் எங்களிற்கும் தெரியும். அவர் பெரிய உலக வல்லரசு, நாங்கள் சின்ன விடுதலை இயக்கம். ஆனாலும், எங்களிற்கு ஒரு ஒருமைப்பாடு இருக்கின்றது. என்ன ஒருமைப்பாடென்றால், அதுதான் இராணுவபலம். அவா இராணுவ பலத்தை தேடிக் கொண்டிராவிட்டால் இன்று உலகத்தில் உச்சக்கட்டத்தில் உலக மகா சக்தியாக எல்லாரிற்கும் மேலான இடத்தில் இருக்கேலாது. களத்தில் வீரசாதனைகளை நிகழ்த்தியதனால்தான் எங்களிற்கொரு மதிப்பிருக்கின்றது. என்னை இந்த இடத்தில் கூட்டி வைத்துப் பேசுகினம். இது பார்க்கப்போனால், வென்றால் உலகத்தை ஆளலாம். பலத்தை வைத்துக் கொண்டுதான் இராஜதந்திரம், அரசியல் எல்லாம் கதைக்கலாம். பலம் இல்லையென்றால் ஒருவனும் கதைக்கமாட்டான். பழைய காலத்தில் டார்வினின் தியரி பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். அந்த விதியின் படிதான் உலகமே திரண்டு கொண்டுள்ளது. ஆகவே நாம் போராடித்தான் பெறவேண்டும். ஆயிரமாயிரம் மாவீரர்களின் தியாகத்தால், அற்புதமான அர்ப்பணிப்புக்களால் வந்த வெற்றிகள். இதனால், நாங்களெல்லாம் தலைநிமிர்ந்து சிங்கள தேசத்துடன் சமத்துவமாகப் பேசமுடியுமென்றால் எங்கட பலத்தக் கொண்டுதான் பேசுறம்.

இப்பொழுது நீங்கள் கேள்விப்பட்டிருப்பியள், விடுதலைப் புலிகள் தன்னாட்சியுரிமையுடைய தமிழீழ சமஷ்டி அரசை கேட்கிறார்கள் என்று.

நல்லாக் கேட்டுக் கொள்ளுங்கோ. எத்தனைபேர் குழம்பிப் போய் நிக்கிறியள். தமிழீழ சமஷ்டி அரசு, அதாவது - தன்னாட்சியுடையது. எமது தாயக நிலத்தில் - சுதந்திரமாக, கௌரவமாக வாழ்ந்து, எமது மொழியை வளர்த்து, எமது பண்பாட்டை வளர்த்து, எமது பொருளாதார வாழ்வை மேம்படுத்தி, எம்மை நாமே ஆளும் சுயாட்சி முறையைக் கேட்கின்றோம். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளிற்கு முன்னர் - ஈழத் தமிழினம் இதே கோரிக்கையைத்தான் முன்வைத்தது. தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கோ. எங்கட செல்வநாயகம் ஐயா சமஷ்டியை தாங்கோவென்று கேட்டார். அப்ப, சிங்கள அரசாங்கங்கள் அதனை நிராகரித்தன. தமிழர்களிற்கு எதிரான பெரிய வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டன. அன்றைய காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் வேறுபாடு உள்ளது. ஏன், இன்று சிறீலங்கா அரசு இறங்கி வந்து புலிகள் வைத்த கோரிக்கைகளை ஏற்கின்றார்கள். இந்த ஐம்பது ஆண்டும் ஏன் வீணாக இரத்தம் சிந்தப்பட்டது? இரத்த ஆறு ஏன் ஓடியது? பேரழிவுகள் ஏற்பட்டன ஏன்? ஏனென்று சொன்னால் செல்வநாயகம் ஐயாவிடம் எந்தப் பலமும் இருக்கவில்லை... அகிம்சைப் போராட்டம் என்ற ஆன்மீக வழியை அவர் நாடினார். அகிம்சையில் உள்ள ஆன்மீகத் தற்பலத்தை, அதன் மதிப்பை சிங்கள அடக்கு முறையாளர்கள் உணரவில்லை. இப்பொழுதும் உணரமாட்டார்கள்.

ஆனால் - இந்த ஐம்பது, ஆண்டு காலத்தில் வரலாறு, நீண்ட வரலாறு. இருபத்தைந்து ஆண்டுகள் நடைபெற்ற அகிம்சைப் போராட்டம், அதனைத் தொடர்ந்து பிரபாகரனின் இந்த இருபத்தைந்து ஆண்டு ஆயுதப் போராட்டத்தினால், தமிழர் தேசம் தலைநிமிர்ந்து நிற்கின்றது. பெரிய படையணிகள், இராணுவக் கட்டமைப்பில் புலிகளை வெல்ல முடியாது. தமிழர் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். சிங்களவன் இறங்கி வாறான். இதுதான் வித்தியாசம். இப்பொழுது நாங்கள் சொல்லுறம் - விடுதலைப் புலிகள் வைத்த கோரிக்கை - விடுதலைப் புலிகளின் இலட்சியத்திற்கு முரணானதா? அல்லது இறங்கிவிட்டோமா? என்ற கேள்வியுள்ளது. என்ன, நீங்கள் தனிநாடு கேட்டனீங்கள், சமஷ்டி என்று வந்துள்ளீர்கள்? தயவு செய்து இதனைக் கேளுங்கோ... நாங்கள் அந்தக் காலத்திலயிருந்து இந்தக் காலம்வரை, திம்புவில் தொடங்கினம் பதினேழு ஆண்டுகளிற்கு முன்னரே இந்தச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைத்தான் முன்வைத்து தமிழர் தாயகம், தேசியம், சுயாட்சி என்ற மூன்று கோட்பாடுகளுடன் தான் தீர்வுகாண சமாதான வழிகளில் பேசி வந்தோம் - அவர்கள் நீங்கள் தேசிய இனமில்லை, நீங்கள் சிறுபான்மை இனம், சுயநிர்ணய உரிமைக்கு உங்களிற்கு உரித்தே இல்லை என்றனர். சுயநிர்ணய உரிமை என்றால் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை. இதனை, தரவே முடியாது என்று திம்புவில் வைத்து இந்த மூன்று கோரிக்கைகளையும் நிராகரித்தனர். இந்தத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அறிந்தவர்களிற்கு இது விளங்கும். என்றாலும், அன்று தொடக்கம் இன்று வரைக்கும் தலைவரின் மாவீரர் நாள் கொள்கைப்பிரகடனங்களில் திரும்பத் திரும்ப அதையேதான் சொல்லி வருகின்றார். பேச்சுவார்த்தைக்குத் தயாரென்று சொல்லுறம். நாங்கள் எப்பத்தான் பேச்சுவார்த்தைக்கு பின்னடிச்சனாங்கள். பேச்சுவார்த்தை என்பது இப்ப நடக்கிறது மட்டுமல்ல - திம்புவில், டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், தாய்லாந்தில், ஒஸ்லோவில். இப்படியா காலம் காலமாகப் பேசி வந்திருக்கிறம். பேச்சுக்கு போகேக்க தனிநாடு கேட்டுக் கொண்டு பேசப் போகேலாது. உலகம் அங்கீகரிக்காது. ஒரு நியாயமான கோரிக்கையோட போகவேண்டும். அப்ப நாங்கள் சொன்னமென்னவென்றால், தனியரசிற்கு ஈடாக ஒரு மாற்றுத் திட்டத்தை தாவென்று. உலகநாடெங்கும் கேட்டுக்கொண்டு வந்தம். எத்தனையோ அறிக்கைகள் எத்தனையோ கொள்கைப் பிரகடனங்கள் இவற்றின் மூலமாக நாம் இதனைத்தான் சொன்னனாங்கள்.

(நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




# எந்த ஒப்பந்தமும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்குள்தான்!

## ரோக்கியோவில் ரணில் விக்கிரமசிங்க

எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலேயே அமையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரோக்கியோவில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

ரோக்கியோவில் இருந்து திரும்பும் முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுக்களில் நிறையவே சவால்கள் இருக்கின்றன. ஆனால் புதிய நம்பிக்கைகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன.

சமஷ்டித் தீர்வு குறித்து பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புலிகளும் தமது சமஷ்டித் தீர்வு குறித்த பிரேரிப்புக்களை முன்வைப்பார்கள். தற்போதைய சமாதான முயற்சிகள் இரண்டு வகைப்படும்.

நோர்வேயின் முயற்சியுடனான அரசியல் ரீதியான நகர்வு, மற்றது நாட்டை ஜப்பானின் உதவியுடன் அபிவிருத்தி செய்வது. இந்தப் புனரமைப்புப் பணிகளை ஜப்பான் பொறுப்பேற்கவுள்ளது. இது தொடர்பாக நோர்வே - ஜப்பானுடன் நெருக்கமான தொடர்புகளை பேணிவருவதாகவும் ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

# குழந்தைகள் பிறப்பு வீதம் குறைகிறது மருத்துவ ஆய்வில் அதிர்ச்சித் தகவல்!

(கொழும்பு நிருபர்)

இலங்கையில் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைந்து வருவதாக மருத்துவ ஆய்வுகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது. சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட விரிவுரையாளரான டாக்டர் ஷெரின் பெர்ணான்டோ நடத்திய ஆய்விலேயே இது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் - வருடாந்தம் இலங்கையில் குழந்தைகளற்ற தம்பதிகளின் தொகை அதிகரித்து வருகின்றது. இதற்கு ஆண்களின் உயிரணுக்களில் உள்ள குறைபாடுகளே காரணமாகும்.

சுற்றாடலில் ஏற்பட்டுள்ள மாசு மற்றும் மன உளைச்சலால் ஆண்களின் உயிரணுக்கள் குறைபாடு கொண்டதாக உள்ளன. விந்தணுக்களில் உள்ள ரெஸ்ட்ரெஸ்ரின் எனப்படும் ஓமோனின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாலேயே இப்பாதிப்பு ஏற்படுவதாக இந்த ஆய்வில் மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

# சமாதானச் சூழலைக் கொண்டாட பண்டிகைக் காலமாகப் பிரகடனம்!

## விழாக்கள், வாண வேடிக்கைகளுக்கும் ஏற்பாடு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதால், நாடு முழுவதும் நிலவும் அமைதிச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இம்மாதம் முதல் ஜனவரி 2ஆம் திகதி வரை பண்டிகைக்காலமாக அரசு பிரகடனப்படுத்தி உள்ளது என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகப் பத்திரிகையாளர் மாநாடு பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இதன் ஒரு அங்கமாக மொறட்டுவவில் இருந்து நீர்கொழும்புவரை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

டிசெம்பர் முதலாம் திகதி முதல் இரண்டாம் திகதி வரை இசைக் கச்சேரிகள், களியாட்டங்கள் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

டிசம்பர் 31ஆம் திகதி இரவு காலிமுகத்திடலில் முன்னெப்போதும் இடம்பெறாத வகையிலான வாணவேடிக்கைகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் விவசாயிகள் பிரச்சினை புலிகளுடன் பேச 15 பேர் கொண்ட குழு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல் நிலங்களில் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுதல், மற்றும் அதற்கான வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பான விடயங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கென 15 பேரடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா 5 பேர் கொண்ட இக்குழு விரைவில், விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணாவைச் சந்தித்து உரையாடவுள்ளதாகக் காத்தான்குடி சமாதான செயலக இணைப்பாளர் யூ.எல்.முபீன் தெரிவித்துள்ளார்.

இக்குழு, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் தமக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயத்தில் ஈடுபடுவது தொடர்பாக கலந்துரையாடும். அத்தோடு, அவ்விடங்களுக்கு விடுதலைப் புலிப் பிரதிநிதிகளுடன் சென்று அதன் சாத்தியப்பாடுகள் குறித்துப் பார்வையிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இரு போராளிகள் பட்டிருப்பில் கைது!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்புப்பாலச் சோதனைச் சாவடியில் வைத்து இரண்டு இரண்டு விடுதலைப் புலிகளை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். நேற்றுமாலை வாகரையிலிருநது திரும்பிவந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்ட இரண்டு புலிகளும் களுவாஞ்சிக்குடி பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

# இந்திய வெளியுறவுச் செயலருடன் சில தமிழ்க் கட்சிகள் சந்திப்பு!

## ஒன்றரை மணிநேரம் பேச்சு நீடித்தது

(கொழும்பு நிருபர்)

இந்திய வெளியுறவுச் செயலாளர் கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார்.

நேற்றுமாலை தாஜ் சமுத்திரா ஹோட்டலில் மேற்படி சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளைத் தவிர ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தற்போதைய சமாதான முயற்சிகளில் இந்திய அரசு தலையிட வேண்டும் என்றும் வட-கிழக்குப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இதற்கு இந்திய அரசு உதவ வேண்டும் என்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்திய வெளியுறவுச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அத்துடன் நெடுந்தீவு விவகாரம் குறித்தும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். மாலை 5 மணியளவில் ஆரம்பமாகிய மேற்படி சந்திப்பு 6.30 மணிவரை நீடித்தது.

# அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஒஸ்லோ இணக்கத்தை நிராகரிப்பு!

(கொழும்பு)

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் - அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் எட்டப்பட்ட இணக்கத்தை எதிர்ப்பதாக அறிவித்துள்ளது. அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் செயலாளர் சூரிய குணசேகர இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒஸ்லோவில் அரசும் புலிகளும் செய்துகொண்ட சமஷ்டி தொடர்பான இணக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கதொன்றல்ல. இது பௌத்த சிங்கள மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடியதொன்று. இதனால் அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் இந்த இணக்கத்தைத் திட்டவட்டமாக நிராகரிக்கின்றது.

இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் தமது சமூக, பொருளாதார, அரசியல் தனித்துவ நிலையைப்பேண முனையும் போது பௌத்த சிங்கள மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தென்னிலங்கையில முக்கியமான பௌத்தமத அமைப்பு என்பதும் இக்காங்கிரஸ் பௌத்த மத பீடங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### முதுபெரும் அரசியல்வாதி அனில் முனசிங்க நேற்றுக் காலமானார்.

முதுபெரும் அரசியல்வாதியான அனில் முனசிங்க நேற்றுக் காலமானார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கக் காலத்தில் இவர் உதவிச் சபாநாயகராகக் கடமையாற்றினார். 1956 ஆம் ஆண்டில் லங்கா சமசமாசக் கட்சியில் அகலவத்தை நாடாளுமன்ற உறுப்பினராக அனில் முனசிங்க பதவி வகித்தார். பின்னர் பல பதவிகளை வகித்து இறுதியாக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை ரஷ்யாவில இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றினார்.

### நாடாளுமன்றத்தை....

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு ஆதரவு வழங்கும் ஆட்சியல்ல என்பதைத் தற்போதைய அரசாங்கம் நிரூபித்திருக்கின்றது. ஏழு வருட காலத்தை ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதிலேயே அரசாங்கம் முழுக் கவனமும் செலுத்தியிருக்கிறது.

தற்போதைய சமாதான நடவடிக்கைகள் வெற்றி பெறுமாயின் அதற்கான சகல பாராட்டுக்களும் ஜனாதிபதியையே சாரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டீ சில்வா அங்கு உரை நிகழ்த்தும்போது -

தேர்தலைப் புதிதாக நடத்தாமல் தற்போதைய அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வதற்கான தங்கள் திட்டம் பற்றி எதுவும் தெரிவிக்க முடியாது. இருந்தபோதிலும் அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பிரபாகரன்....

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் சமஷ்டித் தீர்வை முன்வைக்க இணங்கும் அளவுக்குச் சென்றுள்ளது.

இது இருதரப்பும் புரிந்துணர்வு நிலையை எட்டியுள்ளதென்பதையே காட்டியுள்ளது.

ஒஸ்லோவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினார். இதுவே புலிகளின் உயர்மட்டத்துடனான சந்திப்பு.

இலங்கையின் அபிவிருத்தியில் புலிகளுக்கும் அரசுக்கும் பங்கு உள்ளதால் - இரு தரப்பு புரிந்துணர்வை ஏற்படுத்த புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்றும், இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் - இது இருதரப்புப் புரிந்துணர்வை மேம்படுத்த உதவும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### அதிரடிப்படை.....

இதேவேளை, நாகப்பா சடலமாக மீட்கப்பட்டுள்ளதையடுத்து கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் ஏற்படலாம் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

# திருமலையில் கைதான புலிகள் மனு 13ஆம் திகதி விசாரணைக்கு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர்ப் பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆறு விடுதலைப் புலிகள், தம்மைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரித் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் இரண்டாம் திகதி கைதான இந்த ஆறு புலிகளையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### தீர்வு எதுவானாலும்...

முறையில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர்.

எவ்வாறான தீர்வு ஏற்பட்டாலும் அதனை இந்தியா வரவேற்கும். தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமான சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

அது குறித்து இந்தியா மகிழ்ச்சியடைகின்றது. ஆனாலும் மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியா நேரடியாக தலையிடமுடியாது.

ஏனெனில், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சட்டரீதியான பிரச்சினைகளை இந்தியா எதிர்நோக்குகின்றது. ஆனாலும் இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்தியா தன்னாலான உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கத் தயாராக இருக்கின்றது.

அதேவேளை - சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கச் சகல அரசியற் கட்சிகளையும் இலங்கை அரசாங்கம் அரவணைத்துச் செல்லவேண்டிய தேவையுள்ளது என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடனான சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அவர் -

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மேலும் வெற்றியடைவதற்கு இந்தியாவின் ஆதரவை அமைச்சர் மிலிந்த மொறகொட தன்னிடம் கேட்டதாகக் கூறினார்.

அத்துடன் ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்தும் அமைச்சர் விளக்கிக் கூறியதாகவும் சொன்னார்.

இதேவேளை - இந்திய வெளியுறவுச் செயலாளருடனான சந்திப்பில் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் இலங்கை வெளியுறவுச் செயலாளர் நிஹால் றொட்றிக்கோவும் கலந்துகொண்டார்.

அதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஜனாதிபதியையும், மற்றும் தமிழ்க் கட்சிகளையும் இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்வால் சிபால் இன்று சந்திப்பார்.

இப்பத்திரகை இல.267, நாவலர் வீதி, யாழப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.